# சிறுவர் சிறுமியருக்கு நீதிக் கதைகள்



முல்லை பிஎல். முத்தையா

# சிறுவர் சிறுமியருக்கு நீதிக் கதைகள்

□

சிறுவர் – சிறுமியருக்கு நீதியை விளக்கும் 50 கதைகளின் தொகுப்பு

□

முல்லை பி.எல். முத்தையா

முல்லை பதிப்பகம்

323/10, கதிரவன் காலனி,
அண்ணா நகர் மேற்கு, சென்னை–40
போன்: 26163596, 9840358301

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Siruvar Sirumiyur<br>Needhi Kathaigal |
| Language | : | Tamil |
| Edition<br>Second Edition | : | November 1997<br>March 2006 |
| Author | : | Mullai PL. Muthiya |
| Copy right | : | Author |
| Paper used | : | Cream wove 10.5 kg. |
| Size of the Book | : | Crown 18.5 x 12.5 cms. |
| Type Point | : | 12 Point |
| Number of Copies | : | 1000 |
| Number of Pages | : | 80 |
| Publisher | : | Mullai Pathipagam,<br>323/10, Kathiravan Colony,<br>Anna Nagar West,<br>Chennai - 600 040.<br>Phone : 26163596 |
| Printed at | : | Surya Printers,<br>Chennai-600 014. |
| Binding | : | Section Stitching |
| Price | : | **Rs. 20.00** |
| Subject | : | Stories for Children |

# இதில் உள்ள கதைகள்


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1. | மகிழ்ச்சியாக வாழ்ந்தவன் | 5 |
| 2. | மூடத்தனத்தால் ஏமாந்த வியாபாரி | 7 |
| 3. | சமயோசித புத்தியால் தப்பித்தாள் | 9 |
| 4. | இளவரசனின் தியாக உள்ளம் | 12 |
| 5. | தொழில் கற்று முன்னேறினான் | 15 |
| 6. | சுண்டெலிகளின் ஏமாற்றம் | 16 |
| 7. | ஏழைகளின் நெஞ்சக் குமுறல் | 17 |
| 8. | உணவுக்குப் பயன்படுகிறோம் | 19 |
| 9. | தாயை ஏமாற்ற நினைத்தவன் | 20 |
| 10. | திருட்டில் ஒரு தந்திரம் | 21 |
| 11. | அதை நீயே எடுத்துச் செல் | 22 |
| 12. | அவர் எதற்காக இருந்தார்? | 23 |
| 13. | அண்ணனின் பணத் திமிர் | 24 |
| 14. | மோதிரம் அணிந்தவனின் பெருமை | 25 |
| 15. | உணவு தயாராகிறதா? | 26 |
| 16. | தன் பெயரைச் சொல்லாதவன் | 27 |
| 17. | தந்திரவாணன் செய்த தந்திரம் | 28 |
| 18. | பொருளின் அருமை தெரியாதவன் | 31 |
| 19. | ஒரு கடனை தீர்க்க மற்றொரு கடனா? | 33 |
| 20. | தண்ணீர் கரையிலேயே உள்ளது | 34 |
| 21. | சுவையான உணவுக்கு ஏங்கிய ஆண்டிகள் | 35 |
| 22. | நிலம் யாருடையது? | 37 |
| 23. | மோசம் செய்யக் கூடாது | 37 |
| 24. | மனம் இருந்தால் இடம் உண்டு | 39 |

| | | |
|---|---|---|
| 25. | தந்தை செய்த தந்திரம் | 40 |
| 26. | உயிர் பிழைத்த சிறுவன் | 42 |
| 27. | வீட்டில் உள்ள பொருள் யாருக்கு? | 43 |
| 28. | நன்றி இல்லாதவன் | 44 |
| 29. | ஏமாந்த ஓநாய் | 46 |
| 30. | பொய் சொன்ன வியாபாரி | 47 |
| 31. | சிறுவனின் புத்திசாலித்தனம் | 48 |
| 32. | யானையை ஏமாற்றிய எலி | 50 |
| 33. | கிராம வாசியின் பெருந்தன்மை | 52 |
| 34. | ஆட்சியாளரின் பிரச்சார தந்திரம் | 54 |
| 35. | இரண்டுக்கு ஒன்று இலவசம் | 55 |
| 36. | எல்லோருக்குமே'பேப்பே' தான் | 56 |
| 37. | மாப்பிள்ளை வீட்டார் சொல்வது என்ன? | 58 |
| 38. | முன்போலவே பழைய காகித விற்பனை | 59 |
| 39. | வெற்றி பெறுவது எப்படி? | 60 |
| 40. | கணவனை பயமுறுத்தும் மனைவி | 63 |
| 41. | மூடர்கள் உயிரை இழந்தனர் | 65 |
| 42. | திருமணம் செய்துகொள்வது ஏன்? | 67 |
| 43. | இந்த உருவமே போதும் | 68 |
| 44. | பேசுவதும் நடந்து கொள்வதும் | 69 |
| 45. | புரட்சிப் பெண் | 71 |
| 46. | மூன்று பேரையும் தேள் கொட்டியது | 72 |
| 47. | உழைப்பினாலா? கருணையினாலா? | 73 |
| 48. | நாட்டு மக்களை வாழவைத்தவன் | 75 |
| 49. | திறமை மிக்க அமைச்சர்கள் | 77 |
| 50. | குற்றங்களைத் தடுக்க வழி | 79 |

# 1

# மகிழ்ச்சியாக வாழ்ந்தவன்

ஒரு சிறிய நாடு. அந்த நாட்டின் அரசன் ஒரு சமயம் நோய் வாய்ப்பட்டிருந்தான்.

மருத்துவர்கள் பலர் வந்து பார்த்து, சிகிச்சை அளித்தனர்.

என்ன நோய் என்பதைக் கண்டுபிடிக்க இயலவில்லை நோயும் குணமாகவில்லை. மிகவும் வருந்தினான் அரசன்.

“தன் நோயைக் குணப்படுத்துபவருக்கு நாட்டில் பாதியை அளிப்பதாக” அரசன் அறிவித்தான்.

ஆட்சியில் உள்ளவர்கள் கூடி ஆலோசித்தனர். எந்த வழியும் புலப்படவில்லை.

ஒரு அறிஞர் தனக்குத் தோன்றிய யோசனையைக் கூறினார்.

அதாவது “மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்தும் ஒரு மனிதனைக் கண்டுபிடித்து, அவனுடைய அங்கியை (சட்டை) கழற்றி வந்து, அரசனுக்கு அணிவித்தால், நோய் குணமாகிவிடும்” என்றார்.

கவலையில்லாமல் மகிழ்ச்சியோடு வாழும் மனிதனைக் கண்டு பிடித்து வருமாறு அரசன் உத்தரவிட்டான்.

காவலர்கள் நாடு முழு வதும் தேடி அலைந்தார்கள். ஆனால், அத்தகைய மனிதன் ஒருவன்கூட அகப்படவில்லை. வாழ்க்கையில்

முற்றிலும் திருப்தியுடன் மன மகிழ்ச்சியோடு வாழும் ஒரு மனிதனைக் கூட நாட்டில் காணவில்லை.

பணக்காரனாக இருந்தால், அவனுக்கு உடல் நலமில்லை, உடல் நலத்தோடு இருப்பவனுக்குப் போதிய செல்வம் இல்லை. உடல் நலமும், பணமும் இருந்தால் பிள்ளைகள் இல்லையே என்ற கவலை; செல்வமும் உடல் நலமும் இருந்தால், மனைவி சரி இல்லை. பொல்லாத மனைவியால், நாள் தோறும் சச்சரவு; நிம்மதி இல்லை. பிள்ளைகள் இருந்தால், தீயவர்களாக இருந்தனர். இப்படியாக, ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு மனக் கவலை இருந்து கொண்டு இருந்தது.

ஒரு நாள், இரவில் அரசனின் குமாரன் ஒரு குடிசையின் பக்கம் போய்க் கொண்டிருந்தான். அப்போது அந்தக் குடிசையிலிருந்து ஒரு குரல் கேட்டது.

அதாவது: "கடவுள் அருளால் இன்றைய வேலை முடிந்தது. வயிற்றுக்கும் போதுமான அளவு உணவு கிடைத்தது. இனி அமைதியாகப் படுத்து உறங்கலாம். இறைவன் கருணையே கருணை! எனக்கு வேறு என்ன வேண்டும்?"

இந்தக் குரலைக் கேட்டான் இளவரசன். அவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. இளவரசன் காவலர்களை அழைத்து, அந்தக் குடிசைக்குள்ளே இருந்த மனிதனின் சட்டையைக் கொண்டு வந்து அரசனிடம் அளிக்கும்படி உத்தரவிட்டான். மேலும், அந்தக் குடிசைவாசி எவ்வளவு கேட்டாலும் அதைக் கொடுக்கும்படி சொன்னான். காவலர்கள் உடனே அந்த ஏழையின் குடிசைக்குள் சென்றனர்.

அங்கே கவலை இல்லாமல், கடவுளை வழிபாடு செய்து கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டனர். ஆனால், அவன் மிகவும் ஏழ்மையில் இருந்தான். அவனிடம் சட்டை எதுவும் இல்லை.

# 2

# மூடத்தனத்தால் ஏமாந்த வியாபாரி

கங்கைக் கரையில் சிறிய நகரம் ஒன்று இருந்தது. அங்கே காவி உடை அணிந்த ஒருவன் வசித்து வந்தான். அவன் யாரிடமும் எதுவும் பேசுவதில்லை. அதனால், அவனை மௌன சாமி என்று எல்லோரும் அழைத்தனர்.

தினமும் அந்த மௌனசாமி வீடுவீடாகச் சென்று, பிச்சை எடுத்து உண்பது வழக்கம்.

மௌனசாமி வழக்கம் போல் ஒரு நாள் பிச்சை எடுக்கச் சென்றான்.

அப்பொழுது, ஒரு வீட்டில் வியாபாரியின் மகள் பிச்சை போட வந்தாள். அவள் மிக அழகானவள். திருமணம் ஆகாதவள்.

அவளைக் கண்டதும் மயங்கிய மௌனசாமி. மெய்மறந்து, 'கடவுளே!' என்று பெருமூச்சு விட்டான்.

அந்த வார்த்தை காதில் விழுந்ததும், ஓடி வந்து பார்த்தான் வியாபாரி.

மௌனசாமியோ அப்பொழுது கண்களை மூடியபடியே அழகியை நினைத்து, கற்பனையில் ஆனந்தமாக மிதந்து கொண்டிருந்தான்.

வியாபாரி உடனே மௌனசாமியின் காலில் விழுந்து வணங்கி, "மௌனசாமியாகிய நீங்கள் வாய் திறந்து, 'கடவுளே'! என்று சொன்னதில் ஏதோ ஒரு ரகசியம் உள்ளது. கருணை கூர்ந்து, தாங்கள் அதை விளக்கிக் கூறவேண்டும்" என்று பணிவோடு வேண்டினான்.

வியாபாரியின் மூடத்தனத்தைஅறிந்த மௌனசாமி, சூழ்ச்சி செய்ய தீர்மானித்தான்.

வியாபாரியே! உன்னுடைய சொத்து சுகம் யாவும் அழிந்து, உனக்கு மரணம் நேரப் போவதை ஞானப்பார்வையினால் உணர்ந்தேன், அதனால், என்னை மறந்த நிலையில் மௌனம் கலைந்து, 'கடவுளே' என்று கூறிவிட்டேன்'' என்றான் மௌனசாமி.

'சொத்து, சுகம் அழிவு, மரணம்' என்ற சொற்களைக் கேட்டதுமே வியாபாரி நிலைகுலைந்து, தள்ளாடிய நிலையில், "சுவாமி இதற்கு ஒரு பரிகாரம் கூறி, என்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற மன்றாடினான்.

மௌனசாமி கண்களை முடி, சிறிது நேரம் யோசித்து, வியாபாரி, தான் விரித்த வஞ்சகவலையில், சரியாக விழுந்து விட்டான் என்பதை அறிந்து, உள்ளம் பூரித்தான்.

"நீ மிகவும் நல்லவன், நீண்ட காலம் சொத்து சுகத்துடன் வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் கூறுகிறேன். உன் பெண்ணுக்கு கெட்ட நேரம் தொடங்கி விட்டது. அவளுக்குத் திருமணம் செய்து வைத்தால், அன்று இரவே அவள் கணவனை இழந்துவிடுவாள். உனக்கும் மரணம் நேரிடும். ஆகையால், உன் மகளை ஒரு கூடையில் வைத்து மூடி, அதன் மேலே ஒரு விளக்கை ஏற்றிவைத்து, இன்று இரவு பன்னிரண்டு மணிக்கு கங்கையில் மிதக்க விடு'' என்று கூறி புறப்பட்டு விட்டான் மௌனசாமி.

அவன் சொன்னபடியே வியாபாரி செய்தான்.

கங்கையில் வியாபாரியின் மகளுடன் கூடை மிதக்கிறது.

மௌனசாமி ஆவலுடன் வேறு ஒரு பகுதியில் காத்திருக்கிறான்.

அடுத்த நாட்டு இளவரசன், கங்கைக் கரையில் இரவு முகாம் போட்டிருந்தான். மறுநாள் என்ன செய்வது என்று இளவரசனும் பரிவாரங்களும் யோசனையில் ஆழ்ந்திருந்தனர்.

அப்பொழுது விளக்குடன் கூடை ஒன்று மிதந்து வருவதைக் கண்டான் இளவரசன். அதை எடுத்து வரும்படி கட்டளையிட்டான்.

கூடை கொண்டு வரப்பட்டது. திறந்ததும் வியாபாரியின் மகள் அழுது கொண்டே எழுந்து விவரத்தைக் கூறினாள்.

இளவரசன் அவளைத் தேற்றி, காந்தர்வ மணம் செய்து கொண்டான். மௌனசாமி ஏமாற்றம் அடையாமல் இருக்க அதே கூடியில் கருங்குரங்கு ஒன்றை வைத்து மூடி, விளக்கை ஏற்றி வைத்து, மிதக்கவிட்டனர் இளவரசனின் குழுவினர்.

கரையில் ஆவலோடு காத்திருந்த மௌனசாமி, கூடையைக் கண்டு குதித்து ஓடி, அதை தூக்கிச் சென்று திறந்தான்.

கூடைக்குள் இருந்த கருங்குரங்கு கோபத்துடன் மௌனசாமியைக் கடித்து, சின்னாபின்னமாக்கி விட்டது. அவன் வெளியில் தலைகாட்டவில்லை.

*காவிஉடையில் திரிந்து, மூடத்தனமானவர்களை ஏமாற்றுகின்றனர் சிலர்.*

# 3

# சமயோசித புத்தியால் தப்பித்தாள்

சித்திராங்கி என்ற இளம்பெண், ஒரு பணக்காரச் செட்டியிடம் வேலைக்கு வந்து சேர்ந்தாள்.

செட்டியின் மனைவி இறந்து பல ஆண்டுகள் ஆயின. குழந்தைகளும் இல்லை, செட்டியிடம் தங்க நகைகள்,

வைரநகைகள், பொன், வெள்ளி நாணயங்கள், ஏராளமாக இருந்தன. என்றாலும், செட்டி ஒரு கஞ்சன். தர்மம் என்பதையே அவன் அறியாதவன்.

செட்டியிடம் கணக்கன், தோட்டக்காரன், வண்டிக்காரன், சமையல்காரன் ஆகியோர் வேலைக்கு இருந்தனர்.

பணிப் பெண்ணாக வந்து சேர்ந்த சித்திராங்கி, செட்டியின் குணத்துக்கு ஏற்றவாறும், அவனுடைய குறிப்பு அறிந்தும், சாமர்த்தியமாக நடந்து கொண்டாள். அதனால் செட்டியின் நம்பிக்கைக்கு உரியவள் ஆனாள்.

செட்டி தன்னுடைய நகைகள் முதலானவை இருக்கும் இடத்தை சித்திராங்கிக்கு காட்டி வைத்தான்.

'எவ்வளவு நாட்கள் தான் செட்டியிடம் வேலை செய்து கொண்டிருப்பது? இளமைப்பருவம் கழியும் முன்னே, ஒருவனை திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்தி, குழந்தைகளைப் பெற்று வாழவேண்டும்' என்ற ஆசை, அவளுக்கு உண்டாயிற்று.

வியாபாரத் தொடர்பாக, செட்டி வெளியூர் சென்றான்.

அதைப் பயன்படுத்திக் கொண்டு, செட்டி வைத்திருந்த நகைகள், முதலானவற்றை எடுத்து, சிறு மூட்டையாகக் கட்டிக் கொண்டு, சித்திராங்கி வீட்டை விட்டு வெளியேறினாள்.

செட்டி திரும்பி வந்தான். சித்திராங்கியைக் காணவில்லை. நகைகள் வைக்கப்பட்டிருந்த பெட்டியும் காலியாக இருந்தது. செட்டிக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

செட்டியின் ஆட்கள் சித்திராங்கியைத் தேடிச் சென்றனர்.

எவரிடமும் அகப்படாமல் இருக்கவேண்டுமே என்று எண்ணி, பயத்துடன் சித்திராங்கி பயணத்தை தொடர்ந்தாள்.

அப்போது தெருப்பாடகன் ஒருவன் அவளைப் பின்தொடர்ந்தான்.

சித்திராங்கி ஊரைக் கடந்து, காட்டு வழியே சென்றாள். அப்போதும் அவன் அவளைப் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தான்.

அவனிடமிருந்து தப்புவதற்காக அவள் ஒரு யோசனையுடன் திடீரென்று நின்றாள்.

அவனும் நெருங்கி அவள் அருகில் வந்தான்.

அவள் அழுது கொண்டே, "ஐயா, என் கணவனின் கொடுமை தாளமுடியாமல், மனம் வெறுத்து, வீட்டைவிட்டு வெளியேறி தான் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தோடு இங்கே வந்து சேர்ந்திருக்கிறேன். ஆனால், தூக்கு மாட்டிக் கொள்ள மரக்கிளையில் கயிறு கட்டத் தெரியவில்லை, நீ அதற்கு உதவி செய்தால் நல்லது" என்று கண்கலங்கியபடி சொன்னாள்.

அவள் அணிந்திருந்த நகைகளைக் கவர்ந்து செல்லும் எண்ணத்தில் தெருப்பாடகன் இருந்தான். அதனால், அவள் தூக்கில் தொங்கி, செத்துத் தொலைந்தால், நகைகளை எளிதாக எடுத்துக் கொள்ளலாமே என்ற ஆசையில் சரி என்று சொல்லி, மரத்தில் ஏறினான். கயிறைக் கட்டி, மற்றொரு நுனியில் சுருக்கு முடிச்சுப் போட்டு விட்டான்.

"ஐயா, எனக்கு எட்டாத உயரத்தில் சுருக்கு தொங்குகிறதே! அதிலே எப்படி நான் கழுத்தைக் கொடுப்பது? அரை குறையாகச் செய்து, உயிர் போகாவிட்டால், அவமானப்பட்டு தண்டனைக்கும் அவமானத்துக்கும் ஆளாக நேரிடுமே. ஆகையால், நீ முதலில் செய்து காட்டினால், நான் அப்படியே செய்வேன்" என்றாள் அவள்.

தெருப்பாடகனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. தன்னுடைய மிருதங்கத்தை நிமிர்த்தி வைத்து, அதில் ஏறி நின்று, சுருக்கு

முடிச்சை கழுத்தில் மாட்டிக் கொண்டு எட்டுமா என்று சோதித்துப் பார்த்தான்.

அந்தச் சமயம் சித்திராங்கி, படீரென்று மிருதங்கத்தை காலால் உதைத்துத் தள்ளிவிட்டாள். சுருக்கு முடிச்சு தெருப் பாடகனின் கழுத்தை நெறித்தது.

தனக்கு வந்த ஆபத்தை சமயோசிதமாக நீக்கிக் கொண்ட சித்திராங்கி, மகிழ்ச்சியோடு பயணத்தைத் தொடர்ந்தாள்.

*கருமி பறிகொடுத்தான்; சமயோசித புத்தியினால் அவள் தப்பித்துக் கொண்டாள்.*

## 4

## இளவரசனின் தியாக உள்ளம்

ஒரு நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த அரசன், திடீரென்று இறந்து விட்டான். அந்த அதிர்ச்சியில் ராணியும் இறந்து போனாள். அரசனின் ஒரே வாரிசான இளவரசனுக்கு முடிசூட்டுவதற்கான ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தன.

தாய் தந்தையரை இழந்த துக்கம் இளவரசனை துயரத்தில் ஆழ்த்தியது.

அரச குருவிடம் சென்று, “குருவே! துக்கம் எதனால் ஏற்படுகிறது? துக்கம் உண்டாகாமல் வாழ வழி என்ன? என்று கேட்டான் இளவரசன்.

“இளவரசே! வழி வழியாக வருவது பாசம்! பாசத்தின் விளைவு துக்கம்; பாசத்தை நீக்கி விட்டால், துக்கம் உண்டாகாது” என்றார் அரச குரு.

“பாசத்தை நீக்குவது எவ்வாறு?” என்று கேட்டான் இளவரசன்

“வீடு, மனைவி, மக்கள், சுற்றம், செல்வம், ஆடை, ஆபரணம் போன்ற அனைத்தும் பாசமே! ஒன்றைத் தொடர்ந்து ஒன்று இழுத்துக் கொண்டே செல்லும்” என்றார் அரச குரு.

அவர் சொன்னது இளவரசனின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது.

உடனே இளவரசன் அரண்மனைக்குச் சென்று, அரச உடைகளையும், ஆபரணங்களையும் களைந்து விட்டான். நான்கு முழ வேட்டி ஒன்றை உடுத்தியபடி, அரண்மனையை விட்டு வெளியேறினான்.

அரண்மனையில் உள்ளவர்களும், நகர மக்களும் இளவரசனின் துறவுக் கோலத்தைக் கண்டு வருந்தினர். சிலர் வியப்புற்றனர்.

கையில் ஒரு பாத்திரத்தை ஏந்தியபடி, கால் போன போக்கில் சென்று கொண்டிருந்தான் இளவரசன். எந்த வீட்டின் முன்னேயும் நின்று பிச்சைகேட்பதில்லை. எவரேனும் வந்து பிச்சை இட்டால், ஏற்பான்.

தான் உண்டது போக, எஞ்சியதை காகங்களுக்கும் நாய்களுக்கும் போட்டு விடுவான்.

இரவு வேளையில் மரத்தடியிலோ, வீட்டுத் திண்ணையிலோ படுத்து உறங்குவான். காலையில் எழுந்து புறப்பட்டு விடுவான்.

இப்படியாக, ஒரு ஊரில் அவன் போய்க் கொண்டிருந்தான். அப்போது ஒரு வணிகனின் மனைவி அவனைக் கண்டு, உணவு அருந்த அவனை வீட்டுக்குள் வருமாறு அழைத்தாள்.

“எந்த வீட்டிற்குள்ளும் நுழைவது இல்லை” என்று சைகையால் காட்டி விட்டு, அவன் நடந்து சென்று கொண்டிருந்தான்.

அவனுடைய அழகான தோற்றத்திலும், தாமரை மலர் போன்ற கண்களிலும் மனதைப் பறி கொடுத்தாள் வணிகனின் மனைவி. அவள் உள்ளத்தைக் கட்டுப்படுத்த இயலாமல், அவன் பின்னே ஓடி, “இத்தகைய பேரழகு பொருந்திய நீ பிச்சை எடுப்பானேன்? எந்தப் பெண்தான் உன் தாமரைக் கண்களைக் கண்டு மயங்காமல் இருக்க முடியும்?” என்று மருகினாள்.

அவள் கூறியதைக் கேட்டதும், “தாயே! இந்தக் கண்கள் தானே உன்னை மயங்கச் செய்தன? இதோ பார்! என்று கூறி, உடனே ஒரு கண்ணை தன் விரலால் தோண்டி எடுத்து, அவளிடம் காட்டி, “இப்போது நன்றாகப் பார்! இந்தச் சதை துண்டா உன்னை மயக்கிற்று?” என்று கேட்டான் துறவியான இளவரசன்.

வணிகனின் மனைவி, அழகு மயக்கத்திலிருந்து விடுபட்டு, “நீங்கள் ஒரு கண்ணை இழப்பதற்குப் பாவி நான் அல்லவா காரணமானேன்” என்று கதறி, அவன் காலில் விழுந்தாள்.

“தாயே! நீ எனக்குத் தீமை எதுவும் செய்யவில்லை. என் கண்ணைக் கெடுக்கவில்லை. மாறாக, எனக்குப் பொறுமையைப் போதித்து விட்டாய்” என்று கூறி துறவுக் கோலம் பூண்டிருந்த இளவரசன் புறப்பட்டான்.

*துறவுக் கோலம் கொள்வதற்கு, மனவலிமை, உள்ளத் தூய்மை மிக அவசியமானதாகும்.*

# 5

# தொழில் கற்று முன்னேறினான்

இரும்பு வியாபாரி ஒருவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் தந்தைக்கு உதவியாக கடையில் இருந்து கொண்டிருந்தனர்.

வியாபாரிக்கு வயதாகி விட்டது. எனவே, தன்னுடைய சொத்து முழுவதையும் இளைய மகனுக்கே கொடுத்து விட விரும்பினார். ஏன் என்றால், இளைய மகனிடம் மிகுந்த பிரியம் கொண்டிருந்தார்.

அதை அறிந்த வியாபாரியின் மனைவி கணவனிடம், "இருவருமே நம்முடைய பிள்ளைகள்தானே சொத்து இருவருக்கும் பொது அல்லவா? இளையவனுக்கு எல்லாவற்றையும் கொடுத்து விட்டால், மூத்தவன் என்ன செய்வான்? இருவருக்கும் சமமாகக் கொடுப்பதே நியாயம் என்று வாதாடினாள்.

அதற்கு வியாபாரி, "நான் தேடிய சொத்து. என் விருப்பப்படி, இளையவனுக்குக் கொடுக்கவே விரும்புகிறேன். இந்தச் செய்தியை நம் மக்களுக்குத் தெரிவிக்கக் கூடாது" என மனைவியிடம் எச்சரித்தார்.

மனைவி, தன் வேண்டுகோளை கணவன் ஏற்காததால், மிகவும் வருந்தி அழுது கொண்டிருந்தாள்.

அப்பொழுது, குடும்ப நண்பர் ஒருவர் வந்தார். வியாபாரியின் மனைவியைப் பார்த்து. "ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார். கணவனின் எண்ணத்தைக் கூறி வருந்தினார் மனைவி.

மேலும், "என்னிடம் தனியாக எதுவுமே இல்லை. இருந்தால், மூத்தவனுக்குக் கொடுக்கலாம். என் துயரத்தைப் போக்க வழி எதுவும் தெரியவில்லை" என்று புலம்பினாள்.

"அம்மா! நீங்கள் கலங்க வேண்டாம். துன்பம் தீர வழி ஒன்று உண்டு. அதாவது இளையவனுக்கே சொத்து முழுவதும் கிடைக்கப் போகிறது. மூத்தவனுக்கு எதுவும் இல்லை என்பதை இப்பொழுதே அவர்களிடம் தெரிவித்து விடுங்கள் பின்னால் இருவரும் சமமாகி விடக்கூடும்" என்று கூறிச் சென்றார் உறவினர்.

மகன்கள் இருவரிடமும் விவரத்தைக் கூறினாள் தாய்.

இளையவன், 'சொத்து முழுவதும் தனக்குக் கிடைக்கப் போகிறது. அதில் அண்ணனுக்கு ஏன் பங்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கர்வமாக இருந்தான். மேலும், தொழிலைக் கவனிக்கவில்லை.

'சொத்தில் தனக்கு பங்கு இல்லை' என்று தாய் கூறியதும், மூத்தவன் அப்பொழுதே வீட்டைவிட்டுப் புறப்பட்டு, அயலூர் சென்றான். அங்கே தொழில் பயிற்சி பெற்றான்.

வியாபாரி இறந்து போனார்.

இளையவன், தொழில் முறை தெரியாமல், சொத்து முழுவதையும் இழந்து, உணவுக்கே வழியில்லாமல் திண்டாடலானான். மூத்தவன் தொழில் பயிற்சி பெற்று, பணக்காரன் ஆனான். தாயையும் ஆதரித்தான்.

# 6

# சுண்டெலிகளின் ஏமாற்றம்

ஒரு விவசாயியின் தானியக் களஞ்சியத்தின் அருகில், சுண்டெலி ஒன்று வசித்து வந்தது.

அந்தக் களஞ்சியத்தில் சிறு துவாரம் இருந்தது. அதன் வழியாகச் சிந்தும் தானியங்களைச் சுண்டெலி வயிறு நிறையத் தின்று சுகமாகத் திரிந்தது. அது தன்னுடைய சுகத்தை மற்ற

சுண்டெலிகளுக்குக் காட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டு, களஞ்சியத்தின் துவாரத்தை பெரிதாக்கிவிட்டது. உடனே மற்ற சுண்டெலிகளை தன் வளைக்கு, விருந்துக்கு வருமாறு அழைத்தது. மேலும் ஒவ்வொன்றுக்குத் தேவையான அளவு தானிய உணவு கிடைக்கும் என, பெருமையாகக் கூறியது அந்தச் சுண்டெலி.

மற்ற சுண்டெலிகள் எல்லாம் விருந்து உண்ண ஆவலாக வந்தன. அவற்றை தன் வளைக்கு அருகில் இருந்த களஞ்சியத்தின் துவாரத்துக்கு அழைத்துச் சென்றது சுண்டெலி. ஆனால், அந்தக் களஞ்சியத்தில் துவாரமே காணப்படவில்லை. ஏமாற்றம் அளித்தது சுண்டெலிகளுக்கு. களஞ்சியத்தின் துவாரம் சிறிதாக இருந்த போது, அதைக் கவனிக்காமலிருந்த களஞ்சியத்தின் சொந்தக்காரன், அது பெரிதானவுடன், அதைக் நன்றாக மூடிவிட்டான் சுண்டெலிகள் ஏமாற்றத்துடன் ஓடின.

# 7

# ஏழைகளின் நெஞ்சக் குமுறல்

ஒரு ஊரில், ஒரு விறகு வியாபாரி இருந்தான். ஏழை, எளியவர்கள் காட்டில் கஷ்டப்பட்டு, விறகுகளை வெட்டிக் கொண்டு தலையில் சுமந்து வருவார்கள். அவர்களிடம் மிகவும் குறைவான விலைக்கு வாங்குவான். அதிகமான விலைக்கு விற்பது விறகுக் கடைகாரனின் வழக்கம். இப்படியாக, அவன் பணக்காரனாகி விட்டான். வீடு கட்டி வசதியாக வாழ்ந்தான்.

அந்த ஊரில் அவனைத் தவிர வேறு வியாபாரி இல்லை. அதனால், அவன் கேட்கும் விலைக்கு விற்பார்கள், சொன்ன

சுண்டெலிகளுக்குக் காட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டு, களஞ்சியத்தின் துவாரத்தை பெரிதாக்கிவிட்டது. உடனே மற்ற சுண்டெலிகளை தன் வளைக்கு, விருந்துக்கு வருமாறு அழைத்தது. மேலும் ஒவ்வொன்றுக்குத் தேவையான அளவு தானிய உணவு கிடைக்கும் என, பெருமையாகக் கூறியது அந்தச் சுண்டெலி.

மற்ற சுண்டெலிகள் எல்லாம் விருந்து உண்ண ஆவலாக வந்தன. அவற்றை தன் வளைக்கு அருகில் இருந்த களஞ்சியத்தின் துவாரத்துக்கு அழைத்துச் சென்றது சுண்டெலி. ஆனால், அந்தக் களஞ்சியத்தில் துவாரமே காணப்படவில்லை. ஏமாற்றம் அளித்தது சுண்டெலிகளுக்கு. களஞ்சியத்தின் துவாரம் சிறிதாக இருந்த போது, அதைக் கவனிக்காமலிருந்த களஞ்சியத்தின் சொந்தக்காரன், அது பெரிதானவுடன், அதைக் நன்றாக மூடிவிட்டான் சுண்டெலிகள் ஏமாற்றத்துடன் ஓடின.

# 7

# ஏழைகளின் நெஞ்சக் குமுறல்

ஒரு ஊரில், ஒரு விறகு வியாபாரி இருந்தான். ஏழை, எளியவர்கள் காட்டில் கஷ்டப்பட்டு, விறகுகளை வெட்டிக் கொண்டு தலையில் சுமந்து வருவார்கள். அவர்களிடம் மிகவும் குறைவான விலைக்கு வாங்குவான். அதிகமான விலைக்கு விற்பது விறகுக் கடைகாரனின் வழக்கம். இப்படியாக, அவன் பணக்காரனாகி விட்டான். வீடு கட்டி வசதியாக வாழ்ந்தான்.

அந்த ஊரில் அவனைத் தவிர வேறு வியாபாரி இல்லை. அதனால், அவன் கேட்கும் விலைக்கு விற்பார்கள், சொன்ன

விலைக்கு வாங்குவார்கள். சில ஆண்டுகளாக, அந்த விறகுக் கடைக்காரனை அறிந்த பெரியவர் ஒரு நாள், "ஏழைகளை வஞ்சித்து, அவர்கள் வயிற்றில் அடிக்காதே; இப்பொழுது வசதியாக வாழ்கிறோமே என்று இறுமாப்புக் கொள்ளாதே. 'பிறரை வஞ்சிப்பவன், ஒரு நாள் வஞ்சிக்கப்படுவது உறுதி' என்று புத்திமதி கூறி எச்சரித்தார்.

பெரியவரைப் பார்த்து, "உம்முடைய புத்திமதி எனக்குத் தேவை இல்லை. விற்பவர்கள் விற்கிறார்கள் வாங்குகிறவர்கள் வாங்குகிறார்கள், நீர் ஏன் குறுக்கிட வேண்டும்? உம்முடைய வேலையை நீர் பார்த்துக் கொள்ளும், என் தொழிலில் தலையிட வேண்டாம்" என்று அலட்சியமாகப் பேசி, ஏசினான் விறகு வியாபாரி. தொடர்ந்து அவன் போக்கிலேயே தொழிலை நடத்திக் கொண்டிருந்தான். சில நாட்களுக்குப்பிறகு, விறகுக் கடைக்காரன் வீட்டின் அடுக்களையில் நெருப்புப் பற்றி, வீடு முழுவதும் தீ பரவி, அடுத்தாற்போல் இருந்த விறகுக் கிடங்கும் தீப்பற்றி எரிந்து எல்லாம் சாம்பல் ஆயின.

விறகுக் கடைக்காரன், உடுத்தியிருந்த உடையோடு நின்று "எப்படி தீப்பற்றியது என்பது தெரியவில்லையே" என்று புலம்பிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஆறுதல் கூற எவருமே அவன் அருகில் செல்ல வில்லை.

அப்பொழுது, அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த பெரியவர், "ஏழை மக்களின் நெஞ்சத்திலிருந்து எழுந்த நெருப்பினால் தான் இப்படி பற்றி எரிந்து சாம்பலாயிற்று" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு சென்றார்.

# 8
# உணவுக்குப் பயன்படுகிறோம்

ஒரு பண்ணையாரிடம் வல்லூறும், சேவலும் இருந்தன

வல்லூறு பண்ணையாரிடம் பழகி அவர் அழைத்த போதெல்லாம் சென்று, அவருடைய மணிக்கட்டில் உட்கார்ந்து கொள்வது வழக்கம்.

ஆனால், சேவல் மட்டும் பண்ணையாரை நெருங்குவதில்லை அவர் அருகில் வந்த உடனே, அது கூவிக் கொண்டே ஓடிவிடும்.

ஒரு நாள் வல்லூறு, சேவலைப் பார்த்து, "உங்களுக்கு நன்றி என்பதே கிடையாது". என்று கூறியது. மேலும், கோழி இனத்தையே ஏளனமாகப் பேசத் தொடங்கியது. நீங்கள் அடிமைப்புத்தி உள்ளவர்கள். உங்களுக்குப் பசி வந்தால் மட்டும் எசமானரைத் தேடி ஓடுவீர்கள். காட்டுப் பறவைகளாகிய எங்கள் குணமே வேறு. எங்களுக்கு மிகுந்த வலிமை உண்டு. மற்ற பறவைகளை விட வேகமாக எங்களால் பறந்து செல்ல இயலும் மனிதர்களிடமிருந்து நாங்கள் விலகி ஓடுவதில்லை. எங்களை அழைக்கும் போது, நாங்களாகவே அவர்களிடம் போகிறோம். எங்களுக்கு உணவு அளித்து வளர்ப்பதை நாங்கள் மறப்பதில்லை" என்று கூறியது.

அதற்கு சேவல், "நீங்கள் மனிதர்களைக் கண்டு ஓடாமல் இருப்பதற்குக் காரணம். அவர்களுடைய உணவு மேசைகளின் மீது, வேகவைத்த வல்லூறுகளை நீங்கள் பார்த்ததில்லை. ஆனால், நாங்களோ. வேகவைத்த கோழிகளையும், குஞ்சுகளையும் அடிக்கடி பார்கிறோமே!" என்று கூறியது.

# 9

# தாயை ஏமாற்ற நினைத்தான்

ஒரு ஊரில் இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் படிக்கவில்லை. வேலை எதுவும் பார்க்கவில்லை. அவன் தந்தை இறந்து விட்டான். தாய் மட்டுமே இருந்தாள். அவள் தன்னிடம் இருந்த பணத்தை அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு வட்டிக்குக் கொடுப்பாள். அந்த வட்டியைக் கொண்டு வாழ்ந்து வந்தாள்.

"எனக்குப் பிறகு, உனக்கு யார் சோறு போடுவ ஏதாவது வேலை செய்து பிழைத்தால் நல்லது" என்று எவ்வளவோ சொல்லியும் அவன் அதை பொருட்படுத்துவதே இல்லை. மகன் மீது உள்ள பாசத்தால், தினமும் உணவு அளிப்பாள். அவ்வப் போது தாயிடம் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கேட்டு வாங்கிக் கொண்டு போய் சூதாடுவான் ஒரு நாள், "எனக்கு இரு நூறு ரூபாய் கொடு. நான் ஒரு வியாபாரம் செய்யப் போகிறேன் ஒரு மாதத்தில், திருப்பி தந்து விடுவேன்" என்று கெஞ்சிக் கேட்டான். தாய் கொடுக்க மறுத்து விட்டாள்.

அடுத்த நாள் அவன், ஒரு காவலரிடம் ரகசியமாக ஒரு செய்தி சொன்னான். (கிடைப்பதில் ஆளுக்குப் பாதி என்பது ரகசிய திட்டம்) அன்று இரவு காவலர் ஒருவர் அவனைப் பிடித்துக் கொண்டு, அவன் தாயிடம் வந்து, "அம்மா! உன் மகன் சூதாடினான். அவனைப் பிடித்து நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றோம். நூறு ரூபாய் அபராதம் போட்டிருக்கின்றனர். அதைக் கட்டாவிடில், மூன்று மாதம் சிறையில் இருக்கவேண்டும். என்ன சொல்கிறாய்? என்றார் காவலர்.

"ஐயா, என்ன சொல்லியும் அவன் வேலை செய்யாமல் ஊரைச் சுற்றித் திரிகிறான். நானோ இருப்பதைக் கொண்டு சிக்கனமாக

வாழ்கிறேன். அதோடு பெற்ற கடனுக்காக அவனுக்குச் சோறு போடுகிறேன். இப்பொழுது நூறு ரூபாய் அபராதம் செலுத்தினால், மீண்டும், மீண்டும் சூதாடி விடுவான். ஆகையால், மூன்று மாதம் சிறையில் அவன் இருந்தால், புத்தியாவது வரும். எவ்வளவோ பெரிய மனிதர்கள், தேசபக்தர்கள் சிறைக்குப் போகவில்லையா? செயலில் வேறுபாடு இருந்தாலும் சிறைச்சாலை பொதுதானே?" என்று கூறி முடித்தாள் அவன் தாய்.

அவனைக் கூட்டிக் கொண்டு காவலர் வெளியே சென்றார்.

*தங்கள் திட்டம் தோல்வி அடைந்ததில் இருவருக்கும் ஏமாற்றம்.*

# 10

# திருட்டில் ஒரு தந்திரம்

பட்டணத்திலிருந்து ஒரு வியாபாரி ஒரு சிற்றூருக்கு வந்தான் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தான். பழைய பொருள்கள் எதுவானாலும் விலைக்கு வாங்கினான். எந்தப் பொருளானாலும் நான்கணா, எட்டணா, ஒரு ரூபாய் அதற்குமேல் வாங்குவதில்லை. இந்தச் செய்தி ஊர் முழுதும் பரவியது. தினமும் மக்கள் வந்து பொருளை விற்று, பணம் வாங்கிச் சென்றனர்.

வியாபாரிக்கு, வீட்டை வாடகைக்கு விட்டவர், "இந்தப் பொருள்களை வாங்கி நீர் என்ன செய்வீர்?" என்று கேட்டார்.

"இந்தப் பொருள்களை லாரியில் ஏற்றி, மலைப்பகுதி, மற்றும் ஆதிவாசிகள் வசிக்கும் இடத்தில் போட்டு விற்பனை செய்வேன். எத்தனையோ வியாபாரத்தில் இது ஒரு விதம்" என்றான் வியாபாரி.

பழைய பொருள்களை வாங்கிக் குவித்ததில் வீடு நிறைந்துவிட்டது.

அந்த ஊரில் இருந்த ஒருவனுக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை வியாபாரியின் வீட்டின் பின்புறம் சுவரில் ஏறி, ஏதாவது ஒரு பொருளை எடுத்து, முன்புறம் வந்து, வியாபாரியிடம் கொடுத்து எட்டணா அல்லது ஒரு ரூபாய் பெற்றுச் செல்வான். இப்படி பலநாட்கள் ஓடின.

அவனுடைய திருட்டுத் தனத்தை ஒருவன் கண்டுபிடித்தான். "நீ செய்யும் திருட்டுவேலை எனக்குத் தெரியும். ஆகையால், எனக்கு அதில் பாதி கொடுத்து விடு" என்று மிரட்டினான் அவன். "என்னுடைய தந்திரத்தால் நான் செய்கிறேன்" உன்னால் முடிந்தால், நீ செய்யலாமே? நான் தடையாக இருக்கமாட்டேன்" என்றான் அவன்.

மறுநாள் வியாபாரியிடம் சென்று அவனுடைய திருட்டுத் தனத்தைக் கூறிவிட்டான். வியாபாரி திருடனைப் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தார் வீட்டுக்குக் காவல் புரிய ஒருவனை ஏற்பாடு செய்தான் வியாபாரி.

*திருட்டில் பங்கு கொடுத்திருந்தால் அவன் காட்டிக் கொடுத்திருப்பானா?*

# 11

# அதை நீயே எடுத்துச் செல்

ஒரு சிற்றூரில் பெரியவர் ஒருவர் இருந்தார். மிகுந்த அனுபவமும் கல்வி அறிவும் பெற்றவர்.

எவர் வந்து, எந்த நேரத்தில் உதவியோ, யோசனையோ கேட்டா லும் தயங்காமல் இயன்றளவு செய்யக் கூடியவர்.

அந்த ஊரில் உள்ள போக்கிரிக்கு பெரியவரிடம் வெறுப்பு. அவரைத் திட்டிக் கொண்டே இருப்பான். ஆனால், அவரோ அதைப்

பொருட்படுத்துவதே இல்லை. ஒரு நாள் அவரிடம் நேரில் சென்று வாயில் வந்தபடி ஏசினான். அவர், "உன்னுடைய வசவுகளை எல்லாம் கூறி முடித்து விட்டாயா?" என்று கேட்டார். அவன் பதில் எதுவும் சொல்லாமல் நின்றான்.

"உன்னுடைய உறவினர்களின் வீடுகளுக்குப் போகும் போது, ஏதாவது கொண்டு செல்வாயா?" என்று கேட்டார்.

"ஆம், வாழைப்பழம், வேர்க்கடலை ஏதாகிலும் வாங்கிச் செல்வேன்" என்றான் அவன்

"நீ கொண்டு போனதை அவர்கள் பெற்றுக் கொள்ள வில்லையானால், என்ன செய்வாய்?" என்று கேட்டார் பெரியவர்.

"திரும்ப எடுத்துக் கொண்டு, வீட்டுக்குத் திரும்பி விடுவேன்" என்றான்

"தம்பி அதுபோல, சற்று முன், என்னை ஏசினாய் அல்லவா? அந்த ஏச்சுக்களை இப்போது நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையால், நீ என்னை ஏசியவைகளை நான் ஏற்றுக் கொள்ள வில்லை. அதனால், நீ ஏசிய ஏச்சுக்களையும் திரும்ப நீயே எடுத்துச் செல்" என்றார் பெரியவர். பிறகு, அவன் ஏசுவதை நிறுத்தி விட்டான்.

# 12

## அவர் எதற்காக இருந்தார்?

ஒரு ஊரில் கோயில் திருவிழா வழக்கம்போல் ஒரு பாகவதரை வரவழைத்து கதை நிகழ்ச்சி நடத்தினார்கள் கோயில் நிர்வாகிகள். கூட்டம் கூடியது.

இன்று "வள்ளி திருமணம்" கதையை பிரபல பாகவதர் நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டது.

“எத்தனை ஆண்டுகளாக இந்த ‘வள்ளி திருமணக் கதையைக் கேட்பது இப்படி புராணக்கதைகளைக் கேட்டு, கேட்டு சலித்து விட்டது. புராணக் கதையை படித்து விட்டோமே. மீண்டும், கண்விழித்து இந்தக் கதையைக் கேட்கவேண்டுமா? என்று முணுமுணுத்துக் கொண்டு எழுந்து சென்றனர். ஒரே ஒருவன் மட்டும் அங்கே உட்கார்ந்திருந்தான்.

கதை கூறும் பாகவதருக்கு கூட்டம் கலைந்து சென்று விட்டதில் கோபமும் வருத்தமும் மேலிட்டது. என்றாலும், ஒருவன் மட்டும் தனக்கு எதிரில் இருப்பது மகிழ்ச்சியாக இருந்தது.

தனக்கு எதிரில் இருந்தவனைப்பார்த்து, இவர் ஒருவர் மட்டுமே பக்தர் என்று எனக்குத் தோன்றுகிறது. இவருக்காகவே நான் இந்தக் கதையைக் கூறுகிறேன்” என்றார் பாகவதர்.

“ஐயா, பாகவதர் அவர்களே! நான் எழுதப் படிக்கத் தெரியாதவன்; தரை விரிப்பையும், பெட்ரோமாக்ஸ் விளக்கையும் எடுத்துக் கொண்டு கோயில் தர்மாகர்த்தா வீட்டுக்குப் போக வேண்டும் அதற்காகவே இங்கே உட்கார்ந்திருக்கிறேன்” என்றார் அந்த ஆள்.

# 13

# அண்ணனின் பணத் திமிர்

ஒரு ஊரில் அண்ணனும், தம்பியும் அடுத்த அடுத்த வீட்டில் வாழ்ந்து வந்தனர்.

அண்ணன் வியாபாரம் செய்து பணக்காரன் ஆனான்.

தம்பியோ உழைத்துச் சம்பாதிக்கும் ஏழ்மை நிலையில் இருந்தான்.

தம்பிக்கு எதுவுமே உதவுவதில்லை. அவனும் அண்ணனிடம் உதவி கேட்பதில்லை.

அண்ணனுக்கு, தான் பணவசதி உள்ளவன் என்ற கர்வம் அதிகம், அதனால் எவரிடமும் அலட்சியமாக நடந்து கொள்வான்.

ஒரு நாள், தன் தம்பியிடம், "உன் வீட்டை என்னிடம் விற்றுவிட்டு வேறு எங்கேயாவது போய் குடியிருக்கலாமே?" என்றான்.

தம்பிக்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, "உனக்கு பணத்திமிர் அதிகம். அகம்பாவத்தால், ஆட்டம் போடாதே; உன்னிடம் எப்பொழுதாவது நான் உதவி கேட்டது உண்டா? உன் வீட்டு வாசலைக் கூட மிதித்தது இல்லையே, அப்படி இருக்கும்போது, என் வீட்டை விலைக்குக் கேட்கிறாயே; உனக்கு எவ்வளவு கர்வம்?

நான் வேண்டுமானால், என் பக்கத்து வீட்டுக்காரர் என் அண்ணன் பெரிய பணக்காரன் என்று பெருமையாகக் கூறிக் கொள்ள முடியும் நான் அப்படி பெருமையாகப் பேச முடியாத போது, நீ ஏன் கர்வத்தோடு இருக்க வேண்டும். ஏனெனில், உன் பக்கத்து வீட்டுக்காரனாகிய உன் தம்பி மிகவும் ஏழையாகிய நான் தானே?" என்று பொரிந்து தள்ளினான். அது முதல் அண்ணனின் அகம்பாவம் மறைந்தது.

# 14

## மோதிரம் அணிந்தவனின் பெருமை

ஒரு கிராமத்திலிருந்து ஒரு இளைஞன் வேலை தேடி சென்னைக்குச் சென்றான். அங்கே அலைந்து திரிந்து, ஒரு சிற்றுண்டி சாலையில் பரிமாறும் வேலையில் சேர்ந்தான். கையில் கொஞ்சம் பணம் சேர்ந்தது.

சில மாதங்களில், ஆடம்பரமாக, கிராமத்துக்குத் திரும்பிச் சென்றான்.

கிராமத்து இளைஞர்கள் அவனை வரவேற்று அவனுடைய சென்னை வாழ்க்கை,வேலை முதலியவற்றை ஆவலோடு கேட்டனர். அவர்கள் சென்னை நகரத்தை பார்க்காதவர்கள்

எல்லோருக்கும் பெருமையாகப் பதில் சொன்னான் அவன்.

அவர்களில் சிலர் தாங்களும் சென்னைக்குப் போக விரும்பினார்கள். போனதும் எழுதுகிறேன். நீங்கள் வரலாம் என்றான்.

அவர்களில் வசதியான இளைஞன் ஒருவன், தான் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றி சென்னையிலிருந்து வந்திருந்த இளைஞனுக்குப் பரிசு அளித்தான்.

வந்திருந்த இளைஞன், சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றான். அங்கு இருந்த கிராமத்து இளைஞர்கள், "மழை உண்டா? வேளாண்மை எப்படி? என்று பல கேள்விகள் கேட்டனர். அவர்களிடம், "நம்ம ஊர் ஆற்றிலே மார்பு அளவு தண்ணீர் போகிறது" என்று கூறி, மோதிரம் அணிந்திருக்கும் விரலை தன் மார்பில் வைத்துக் காட்டிக் கொண்டிருந்தான்.

அவன் மோதிரம் அணிந்திருப்பதை அவர்கள் பார்க்க வேண்டும் என்பது அவனுடைய ஆசை.

# 15

## உணவு தயாராகிறதா?

ஒரு கோயிலைச் சேர்ந்த ஆயிரம் கால் மண்டபத்தின் வாயிலில், அரசாங்க அதிகாரி ஒருவன் நின்று கொண்டு உரத்த குரலில், "சீக்கிரம் தயாராகட்டும். அரசர் வரப்போகிறார். ஊர் மக்கள் எல்லோருக்கும் உணவு அளிக்க வேண்டும்" என்று கூறி, பலருக்கு உத்திரவிட்டுக் கொண்டிருந்தான்.

அந்த அதிகாரியின் பேச்சைக் கேட்கும் போது, மண்டபத்தின் உள்ளே ஊர் மக்களுக்கு உணவு தயாராகிக் கொண்டிருக்கிற தாகத் தெரியும்.

ஆனால், ஒருவர் பின்புற வழியாகப் போய்ப் பார்த்தார். அங்கே எதுவுமே நடைபெறவில்லை.

திரும்பி வந்து, அந்த அதிகாரியிடம் "ஏன் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார் அவர்.

"என்ன செய்வது? மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசரோ, நாடு செழிப்பாக இருக்கிறது. நாட்டில் பட்டினிச் சாவு ஏற்படாது என்று கூறிக் கொண்டிருக்கிறார். அதைத் தெரிவித்து மக்கள் மனதில் நம்பிக்கை ஏற்படுத்தவே இவ்வாறு கூறினேன். இதுவும் அரசர் கட்டளை தான்" என்றான் அந்த அதிகாரி.

# 16

## தன் பெயரைச் சொல்லாதவன்

ஒரு ஊரில் சிலர் காசு வைத்து, சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் போலீசுக்குப் பயந்து, வீட்டுக் கதவைத் தாழ்போட்டு வைத்திருந்தனர்.

சிறிது நேரத்தில், கதவைத் தட்டும் சத்தம் கேட்டது

விளையாடிக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் "யார் அது?" என்று கேட்டான்

பதில் இல்லை. எனவே, போலீசாரோ என்று பயந்தனர்

"கோவிந்தனா?" என்று கேட்டான் உள்ளே இருந்தபடியே.

'ஹுஉம்' என தலையை அசைத்தான், வெளியில் நின்றவன்.

“குமரனா?” என்று கேட்டான் உள்ளே இருந்தவன்.

“ஹூஉம்' என்று தலையை அசைத்தான்

“கேசவனா?” என்று கேட்டான் உள்ளே இருந்தவன்.

அதற்கும் 'ஹூஉம்' என்றான்.

அடுத்து, “கிருஷ்ணனா?” என்று கேட்டான் உள்ளே இருந்தவன்

“ஆம், அவனேதான்” என்று பதில் அளித்தான் வெளியில் நின்றவன்.

வேகமாகவும், கோபமாகவும் கதவைத் திறந்து, “முட்டாளே! முதலிலேயே பெயரைச் சொல்லியிருக்கலாமே. ஒவ்வொரு பெயராகக் கேட்கும் வரை, மரம் போல் நிற்கிறாயே?” என்று கடிந்து கொண்டனர் சீட்டு விளையாடியவர்கள்.

# 17

## தந்திரவாணன் செய்த தந்திரம்

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆட்சி செய்து கொண்டிருந் தான்.

அமைச்சர்கள், அதிகாரிகள், சேனாதிபதி முதலானோர் இருந்தனர்

அந்த நாட்டில் தந்திரவாணன் என்பவன் ஒருவன் இருந்தான்

குறுக்கு வழியில் திடீரென்று பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. ஆனால், மோசடி, கலப்படம், கடத்தல் முதலான வழிகளில் ஈடுபட அவன் விரும்ப வில்லை. எதையுமே தந்திரமான வழிகளிலேயே செய்ய வேண்டும் என்பது அவன் நோக்கம்.

ஒரு நாள், மிகுந்த ஆடம்பரமான உடைகளை அணிந்து கொண்டான் தந்திரவாணன். நேராக அரண்மனைக்குச் சென்று அரசனை தனிமையில் கண்டு, தான் ஒரு இரத்தின வியாபாரி என்றும், பல நாட்டு அரசர்களைக் கண்டு வந்திருக்கிறேன் என்றும் கூறினான். இப்பொழுது இந்த நகரத்தில் தங்க உத்தேசித்திருக்கிறேன். தினமும் அரசசபை கூடும்முன் சில நிமிடங்கள் தங்களிடம் பேசுவதற்கு அனுமதி தரவேண்டும். அதற்காக ஐநூறு பவுன்கள் தங்களுக்குத் தந்து விடுகிறேன்" என்று வேண்டிக் கொண்டான் தந்திரவாணன்.

அவனுடைய உடை, பேச்சு ஆகியவற்றைப் பார்த்து, அவன் ஒரு பெரிய இரத்தின வியாபாரிதான் என்று நம்பினான் அரசன். அதோடு தினம் ஐநூறு பவுன் கிடைக்கும்போது அவனுக்குப் பேட்டி அளிப்பதில் தவறு ஏதும் இல்லை என்று சம்மதித்து விட்டான் அரசன்.

மறுநாள் தந்திரவாணன் ஆடம்பர உடையில் சபை கூடுமுன் வந்து, அரசனிடம் ரகசியமாக சில வார்த்தைகள் கூறிவிட்டுப் போய்விட்டான் அவன் கூறியது அரசனுக்குப் புரியவில்லை. ஆனால், தந்திர வாணன் சிரித்துக் கொள்வான்.

சபை கூடியது அமைச்சர்கள், பிரதானிகள், உயர் அதிகாரிகள் வந்து அவரவர் இருக்கையில் அமர்ந்தனர்.

மூன்றாம் நாள், தந்திரவாணன் வந்து, அரசனுடன் கிசுகிசு என்று பேசுகையில், ஒரு அமைச்சனை கூர்ந்து பார்த்துப் பேசினான் பிறகு, சிரித்தபடியே சென்றான், தந்திரவாணன் யார்? அரசனிடம் தினம் வந்து என்ன பேசிவிட்டுப் போகிறான் என்பது எவருக்குமே புரியவில்லை. ஆனால் அவன் ஒரு செல்வாக்குள்ள பெரிய மனிதன் என்று அனைவரும் நம்பினார்கள்.

நகரத்துக்கு வெகு தொலைவில் இருந்தான் தந்திரவாணன்.

ஊழலில் ஈடுபட்ட அமைச்சன் ஒருவன் தந்திரவாணன் வீட்டைத் தேடிச் சென்று, "அரசருடன் பேசும் பொழுது, என்னைப் பார்த்து சிரித்தீர்களே, என் ஊழல் தெரிந்து விட்டதா" என தயங்கியபடியே கேட்டான்.

"அரசர் மிக கோபமாக இருக்கிறார், உமக்காக நான் பரிந்து பேசிப்பார்க்கிறேன். எதற்கும் கவலை வேண்டாம்" என்று சாமர்த்தியமாகச் சொன்னான் தந்திரவாணன்.

அமைச்சன், உடனே மூவாயிரம் பவுனை அவனிடம் கொடுத்து, "எப்படியாவது என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அவனை வணங்கி, வேண்டிக் கொண்டு சென்றான்.

இப்படியாக, தினமும் அரசனிடம் சென்று, அரச சபையில் இருந்த ஒவ்வொருவரையும் பார்த்துச் சிரித்து, அரசனிடமும் ஏதாவது பேசிவிட்டுச் சென்றான் தந்திரவாணன்.

பிறகு, அமைச்சர்கள், அதிகாரிகள் பலரும், தனித்தனியாக தந்திரவாணனைத் தேடிச் சென்று, நிறைய பவுன்களைக் கொடுத்து, தங்களைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டனர்.

பல நாட்கள் கழிந்தன. அரண்மனையிலிருந்து பெரும் பாலானவர்கள் தந்திரவாணனிடம் வந்து நிறையப் பவுன்களைக் கொடுத்து, வேண்டிக் கொண்டனர்.

தந்திரவாணன் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே, பொருள் சேர்ந்துவிட்டது. ஆகையால், தான் செய்த தந்திரம் ஒரு சமயம் அரசனுக்குத் தெரிந்து விட்டால், தனக்கு ஆபத்தாகி விடுமே என்று யோசித்து முன்எச்சரிக்கையாக நடக்க எண்ணினான்.

அரசனை தனிமையில் சந்தித்து, தான் செய்த தந்திரத்தை விவரமாகச் கூறி, கிடைத்தவற்றில் பாதியை அரசனிடம் சேர்ப்பித்து, தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். தந்திரவாணன்.

அரசன் "நடந்தவற்றைப் பார்த்தால், ஊழல் செய்யாதவர்கள் மிகவும் குறைவு என்று தெரிகிறது". என்றான். மேலும், தந்திரவாணனின் துணிவையும் சாமர்த்தியத்தையும் பாராட்டி மகிழ்ந்தான்.

*குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்று கூறுவார்கள்*

# 18

## பொருளின் அருமை தெரியாதவன்

ஒரு சிற்றூரில் வீரன் என்னும் விறகு வெட்டி ஒருவன் இருந்தான்

அவன் நாள் தோறும் காட்டுக்குச் சென்று விறகு வெட்டி, தலையில் சுமந்து வந்து அதை விற்று, வாழ்ந்து கொண்டிருந்தான்.

வழக்கம்போல் வீரன் காட்டுக்குச் செல்லும் போது, ஏதோ நினைவில் வெகு தொலைவு சென்று விட்டான்.

அப்போது கந்தவர்கள் இருவர் அவன் எதிரே வந்தனர்

வீரனைக் கண்டு அவனை விசாரித்தனர். வீரன் தன்னுடைய கடின உழைப்பைக் கூறினான்.

அவனிடம் இரக்கம் கொண்டு, தங்களுக்கு வேலையாளாக இருக்கும்படி கேட்டனர். வீரனும் அதற்குச் சம்மதித்தான்.

கந்தர்வர்கள் காலையில் வெளியே சென்றனர். அவர்களுக்கு உணவு தயாரித்து வைக்க நினைத்தான் வீரன். ஆனால், சட்டிகள், அரிசி, பருப்பு முதலியவை இல்லாததால், திகைத்து நின்றான் வீரன்.

கந்தர்வர்கள் திரும்பி வந்ததும் வீரனின் திகைப்பைப் பார்த்து' புன்முறுவலுடன் அங்கே ஓர் மூலையில் மறைத்து வைக்கட்

பட்டிருந்த சட்டி ஒன்றைக் காட்டி, இது ஒரு 'அமுதசுரபி' என்றனர்.

'அமுத சுரபி' என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது என்று கூறி, திரு திரு என்று விழித்தான் விறகு வெட்டி வீரன்.

"நமக்கு என்ன உணவு வேண்டுமோ, அதை நினைத்து, சட்டியில் கையை விட்டால், சட்டியில் என்ன உணவு வேண்டுமானாலும் நிறையக் கிடைக்கும்" என்றனர் கந்தர்வர்கள்.

வீரன் அவர்கள் கூறியதைக் கேட்டு அதிசயப்பட்டான். 'அறுசுவை உணவு வேண்டும் என்று நினைத்து சட்டியில் கையை விட்டான்.

சுவையான அறுசுவை உணவு கிடைத்தது. மகிழ்வோடு மூவரும் உண்டனர்.

இப்படியாக வீரன் உழைக்காமல் உண்டு சுகமாக இருந்து வந்தான்.

பல மாதங்கள் சென்றன. கந்தர்வர்கள் புறப்படத் தயாரானார்கள்.

அப்பொழுது வீரனிடம், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டனர். அவன் அமுதசுரபி பாத்திரத்தை தருமாறு கேட்டான்.

"அதை உன்னால் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள இயலாது; வேறு ஏதாவது தருகிறோம்" என்றனர்.

வீரன் பிடிவாதமாக, அதையே விரும்பிக் கேட்டான் அவர்களும் அவன் விருப்பப்படி அமுதசுரபி பாத்திரத்தை அவனுக்குக் கொடுத்து விட்டுச் சென்றனர்.

வீட்டுக்குத் திரும்பியவீரன் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தான். முன்போல் அவன் விறகு வெட்ட காட்டுக்குப் போகவில்லை.

“சில நாட்களாக வீரன் காட்டுக்குப் போகாமல், விறகு வெட்டி வராமல், எப்படி சுகமாக வாழ்கிறான்” என்று ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொண்டனர் அவனுடைய உறவினர்கள். அதோடு அக்கம் பக்கத்தில் உள்ளோரும் பேசலானார்கள்.

ஒரு நாள் வீரனிடமே அதைக் கேட்டு விட்டனர்.

வீரனுக்கு மகிழ்ச்சியும் மதிப்பும் அதிகரிக்கவே, சிறிது அதிகமாகவே மது அருந்தி, ஆடிப் பாடத் தொடங்கினான். அதோடு கூட அமுத சுரபிப் பாத்திரத்தையும் தோளில் வைத்துக் கொண்டு, ஆடிப்பாடி குதித்தான். அமுத சுரபிப் பாத்திரம் கீழே விழுந்து நொறுங்கியது.

வீரன் மிகவருத்த முற்றான். முன்போலவே காட்டுக்கு விறகு வெட்டி வரச் சென்றான்.

*பொருளின் அருமை தெரியாதவனிடம் பொருள் தங்குவது இல்லை.*

# 19

# ஒரு கடனை தீர்க்க மற்றொரு கடனா?

தொழிற் சாலையில் வேலை செய்யும் தொழிலாளி ஒருவன் சூதாடி, கடனாளி ஆகி விட்டார். கடனை திருப்பிக் கொடுக்க முடியாமல் திண்டாடினான்.

கடன் கொடுத்தவரோ தொல்லைப் படுத்தினார், நெருக்கினார். தன்னோடு வேலை செய்யும் சக தொழிலாளியிடம் சென்று கடன் தந்து உதவும்படி வேண்டினான்.

“என்ன தேவைக்குக் கடன் கேட்கிறாய்?” என்று கேட்டார் அவர்

"சூதாட்டத்தில் ஈடுபட்டேன். பணத்தை இழக்க நேரிட்டது. இழந்த பணத்தை மீட்டு விடலாம் என்று மீண்டும் விளையாடினேன். எல்லாவற்றையும் இழந்து, இப்போது கடனாளி ஆகி, துன்புறுகிறேன்." என்று உண்மையைக் கூறினார்.

"சரி, இப்பொழுது நான் கடன் கொடுத்தால், அதை எப்படி எனக்குத் திருப்பித் தருவாய்!" என்று கேட்டார்.

"மாதா மாதம் சிறு தொகையாகத் தந்து விடுகிறேன்" என்றான் அவன்.

"இப்போது என்னிடம் கடன் வாங்கி, அவருடைய கடனை தீர்த்து விடுவாய், பிறகு, எனக்கும் உனக்கும் தகராறு உண்டாகும். பழைய கடனைத் தீர்ப்பதற்காக புதுக் கடன் வாங்குவது முட்டாள் தனமாகும். இப்பொழுதும் ஒன்றும் தொல்லை இல்லை.

பழைய கடன்காரனிடம் சென்று, மாதந்தோறும் சிறு தொகை தருவதாகப் பணிவோடு சொல்லு, அவனும் சம்மதிப்பான். புதிதாக கடன் வாங்குவதற்காக முயற்சிக்காதே. மாதம்தோறும் கொடுத்து விடு; கடனும் தீர்ந்துவிடும். நிம்மதியாக இருக்கலாம்" என்று அறிவுறுத்தினார்.

அவனும் அவர் கூறியபடியே செய்து கடன் தொல்லையில் இருந்து விடுபட்டு அமைதியாக வாழ்ந்தான்.

# 20

## தண்ணீர் கரையிலேயே உள்ளது

பண்ணையார் ஒருவர் தம்முடைய நிலங்களைப் பார்வையிடச் சென்றார். பண்ணை ஆட்களும் கணக்கரும் உடன் சென்றனர்.

அப்போது, அருகில் இருந்த ஏரியைப் பார்த்து, "இந்த ஏரிநீர் எப்படி இருக்கிறது?" என்று கேட்டாா பண்ணையார்.

“பால் போல் இருக்கிறது!” என்றார் ஒருவர்

“முத்துப் போல் இருக்கிறது!” என்றார் வேறொருவர்.

“தெளிவாய் இருக்கிறது!” என்றார் மற்றொருவர்.

அவர்கள் அளித்த பதில்கள் பண்ணையாருக்கு திருப்தி அளிக்கவில்லை அருகில் நின்று கொண்டிருந்த கணக்கரைப் பார்த்தார்.

“பண்ணையார் அவர்களே! தண்ணீர் கரையிலேயே இருக்கிறது” என்றார் கணக்கர்.

‘ஏரித் தண்ணீர் சுருங்கி விட்டதா? விவசாயத்துக்குப் போதுமா!’ என்ற கருத்தில் கேட்டார் பண்ணையார்.

‘கரையிலேயே இருக்கிறது’ என்றால், போதுமான அளவு நீர் உள்ளது என்று புரிந்து கொண்டார் பண்ணையார்.

# 21

## சுவையான உணவுக்கு ஏங்கிய ஆண்டிகள்

ஒரு ஊரில், ஆண்டிக் கோலத்தில் இருவர் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்து உண்டு, ஒரு சத்திரத்தில் படுத்துக் கொள்வார்கள்.

உடல் உழைப்பு எதுவும் இல்லாததால், அவர்களின் உடல் கொழுத்துப் பருத்துக் காணப்பட்டது.

அந்த ஆண்டிகளை தினந்தோறும் பார்த்த இரண்டு தொழிலாளர்களில் ஒருவன், “இந்த ஆண்டிகளால் சமுதாயத்துக்கு என்ன நன்மை? உடல் ஊனம் அடைந்தவர்கள் கூட, ஏதேனும் வேலை செய்து பிழைக்கிறார்களே! இவர்கள் ஏன் பிச்சை எடுத்து உண்டு திரிகிறார்கள்? என்று கேட்டான்.

மற்றொருவன், "அவர்களைக் குற்றம் சொல்லக் கூடாது, நாடு முழுவதிலும் இப்படி சடை முடிகளுடன் ஆண்டிக் கோலத்தில் திரிகிறவர்களுக்கு எல்லாம் வணக்கம் தெரிவித்து, சோறு போடுகிறார்களே அவர்கள் தான் காரணம். உழைப்பவனுக்குத் தகுந்த கூலிகொடுக்க மாட்டார்கள், ஆனால், இவர்களைப் போன்ற சோம்பேறித் தடியர்களுக்கு உணவு அளித்து, கொழுக்க வைக்கின்றனர்" என்று ஆத்திரத்தோடு சொன்னான்.

ஒரு நாள், மேற்படி ஆண்டிகள் இருவரையும் தன் வீட்டுக்கு அழைத்துப் போய், அறுசுவையுடன் உணவு அளித்தான், அந்தத் தொழிலாளி.

ஆண்டிகள் இருவரும் அம்மாதிரியான உணவை, அதற்கு முன் சாப்பிட்டதே இல்லை. மிகவும் சுவைத்து, மகிழ்ந்து வயிறுமுட்ட உண்டு, திக்கு முக்காடிப் போய் படுத்து உறங்கினார்கள்.

அம்மாதிரியான உணவு தினமும் கிடைக்காதா என ஏங்கி, தவித்தனர்.

அந்த ஆண்டிகளுக்குப் பிச்சை எடுத்து உண்பதில் சலிப்புத் தோன்றியது.

பிறகு என்னசெய்வது பசியைத் தணிக்க மீண்டும் பிச்சை எடுத்தனர். சில நாட்களில் ஆண்டிகள் இருவரும் ஏக்கத்தால் உடல் மெலிந்து எலும்பும் தோலுமாக ஆனார்கள்.

"பார்த்தாயா? அவர்கள் உடம்பை? எவன் ஒருவன் உழைத்து அதனால் கிடைத்ததைக் கொணடு மனநிறைவு கொள்கிறானோ அவனே திடகாத்திரத்தோடு வாழ்வான்!" என்றான் தொழிலாளர்களில் ஒருவன்.

சோம்பேறியாகத் திரிந்து பிச்சை எடுப்பதும், அப்படிபட்டவர்களுக்கு இரக்கம் கொண்டு பிச்சை இடுவதும் தவறு என்பதை உணரவேண்டும்.

# 22

## நிலம் யாருடையது?

பல ஆண்டுகளுக்கு முன், வட இந்தியாவின் ஜேட்புரி என்னும் ஊரில் ஒரு வழக்கு, நீதி மன்றத்தில் நடைபெற்றது.

தண்ணீர் தொட்டியின் அருகில் உள்ள நிலம் சம்பந்தமாக இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே ஒரு வழக்கு.

அந்த நிலம் யாருக்குச் சொந்தமானது என்பது பற்றி வாதாடினார்கள். ஆனால், இருதரப்பினருக்கும் ஆவணங்கள் ஆதாரங்கள் எதுவுமில்லை.

95 வயதுள்ள தாவூத்பீகாவும், ஆபா அபுவும் எப்படிச் சொல்கிறார்களோ, அப்படியே நடந்து கொள்கிறோம்" என்று இந்துக்கள் கூறினார்கள்.

அந்த இரண்டு முஸ்லீம் கனவான்களும் "அந்த நிலம் இந்துக்களுக்குத்தான் சொந்தம்" என்று சொன்னார்கள்.

எத்தகைய உயர்வான நியாயமான எண்ணம் கொண்டிருந்தனர் என்பதை நினைக்கும்போது உள்ளம் நெகிழ்கிறது.

# 23

## மோசம் செய்யக் கூடாது

ஒரு ஊரில் செட்டியார் ஒருவர் சிறு சிறு தொகையை வட்டிக்குக் கொடுப்பார். ஆனால், வட்டி அதிகமாக வாங்குவார். அவசரமான வேளைகளில், சிறு வியாபாரிகள் அவரிடம் சென்று கடன் வாங்குவார்கள்.

ஒரு சமயம், காய்கறி விற்பனை செய்பவனும், பழம் விற்பவனும் செட்டியாரிடம் வந்து கடன் கேட்டனர்.

“எவ்வளவு ரூபாய் தேவை? யாருக்கு வேண்டும்?” என்று கேட்டார் செட்டியார். மேலும்,

“நூற்றுக்கு பத்து ரூபாய் வட்டி. தினம் ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும் யார் ஜாமீன்?” என்று கேட்டார்.

“எனக்கு நூறு ரூபாய் கொடுங்கள். தினமும் ஒரு ரூபாய் கொடுக்கிறேன். பழக்கடைக்காரன் ஜாமீன்” என்றான் காய்கறி வியாபாரி.

இருவரிடமும் சீட்டில் கையொப்பம் பெற்றுக் கொண்டு, வட்டி முப்பது ரூபாய் போக எழுபது ரூபாயைக் கொடுத்தார் செட்டியார்.

வெளியே வந்ததும், “செட்டியாருக்கு முப்பது ரூபாய் லாபம், எனக்கு எழுபது ரூபாய் லாபம்” என்று கேலியாகச் சொன்னான் காய்கறி விற்பவன்.

“நீ சொல்வதைப் பார்த்தால், செட்டியாரின் கடனைத் தீர்க்காமல் ஏமாற்றலாம் என்று தோன்றுகிறது. சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதே மனிதத் தன்மை. செட்டியார் சந்தைக்கு வந்து கேட்கும்போது கிஸ்தி கட்டிவிடு. செட்டியார் சத்தம் போட்டுச் சொன்னால், உன் மானம் போய் விடும். ஒருவனும் உன்னை மதிக்காமல், ‘நூறு ரூபாய் கடனை வாங்கி மோசம் செய்தவன் என்று பேசுவார்கள். நூறு ரூபாய்க்காக மானத்தை இழக்கப் போகிறாயா! உனக்காக, நான் ஜாமீன் கையொப்பம் போட்டிருக்கிறேன்” என்று அறிவுரை கூறி எச்சரித்தான் பழ வியாபாரி.

“நான் தவறாகச் சொல்லி விட்டேன் என்னை மன்னித்து விடு; கிஸ்தியை ஒழுங்காகச் செலுத்துகிறேன்” என்றான் காய்கறி வியாபாரி.

# 24

## மனம் இருந்தால் இடம் உண்டு

பெரியவர் ஒருவர், ஒரு ஊரிலிருந்து, அடுத்த ஊரில் இருந்த கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து விட்டுத் திரும்பினார். களைப்பு மேலிட்டது. நடக்க முடியவில்லை. அருகில் ஒரு குடிசை காலியாக இருந்தது. அங்கே சென்று படுத்தார்.

சிறிது நேரத்தில், மற்றொரு பெரியவர் வந்தார். "இந்த ஊரில் ஒருவர் பணம் தர வேண்டும். அவர் வீட்டில் இல்லை. வீடு பூட்டிக் கிடக்கிறது. காலையில் அவரைப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன். இரவு இங்கே தங்குவதற்கு இடம் கிடைக்குமா?" என்றார்.

"நிச்சயம் இடம் உண்டு. இங்கே ஒருவர் படுக்கலாம்; இருவர் உட்கார்ந்து கொள்ளலாம்; வருக" என்று அவரை வரவேற்றார்.

இருவரும் தரையில் இருந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது, மற்றொரு பெரியவர் வந்தார். "ஐயா, மழை பெய்கிறது." இரவு இங்கே தங்கிக் கொள்ள இடம் கிடைக்குமா?" என்றார்.

"தாராளமாக இடம் உண்டு. "ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம். மூவர் நிற்கலாம். அவ்வளவுதான் இங்கே இடம் உள்ளது." என்று அவரை வரவேற்றனர் இருவரும்.

மூவரும் இரவு முழுவதும் பேசிக் கொண்டே நின்றனர்.

விடிந்தது, மழையும் நின்றது

மூவரும் விடைபெற்று, அவரவர் ஊருக்குத் திரும்பிச் சென்றனர்.

எத்தகைய பரந்த உள்ளம். அதை நினைக்கும் போது மனம் நெகிழ்கிறது.

# 25

## தந்தை செய்த தந்திரம்

ஒரு சிற்றூரில் விவசாயி ஒருவர் இருந்தார். அவருக்கு நான்கு மக்கள் இருந்தனர். அவர்கள் நால்வரும் படிக்க விருப்பம் இல்லாமல், ஊர் சுற்றித் திரியலானார்கள்.

தன்னுடைய நிலத்தை உழுது பயிர் செய்தாலும், குத்தகைக்கு விடுவதற்குப் பதிலாக, லாபம் கூடுதலாகக் கிடைக்குமே என்று விவசாயி கவலைப்பட்டார். மேலும், அவர்கள் எப்படி வாழப் போகிறார்களோ என்று வருந்திக் கெண்டிருந்தார்.

ஒரு நாள், மூத்த மகனைக் கூப்பிட்டு, "உன் தாய் இறந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன. அவள் அணிந்திருந்த நகைகள் எல்லாவற்றையும் ஒரு குடத்தில வைத்து, ஊருக்கு வெளியே இருக்கும் நம்முடைய காலியான தோட்டத்தில் புதைத்து வைத்தேன். எனக்கு வயதாகி விடடது, அதை எடுத்து இப்போது உங்களுக்குப் பங்கு பிரித்து தரலாம் என்று நினைக்கிறேன். ஆனால், எந்த இடத்தில் புதைத்து வைத்தேன் என்பது எனக்கு நினைவு இல்லை, கூலிக்கு ஆள்பிடித்து, மண்ணைத் தோண்டச் செய்து, அதை எடுப்போமானால், தகவல் தெரிந்து, அரசு அதிகாரிகள் வந்து பறிமுதல் செய்து கொண்டு போய் விடுவார்களே என்று பயமாக இருக்கிறது" என்றார்.

நகைகள் என்று சொன்னதும், அவனுக்கு ஆசை மேலிட்டது.

"அப்பா! வேறு ஆள் வேண்டாம், நானே தோண்டுகிறேன்" என்று கூறி, உடனே மண்வெட்டி எடுத்துக் கொண்டு போய்

மண்ணைத் தோண்டத் தொடங்கினான்.

மற்ற மூவரும், 'அவன் எதற்காகத் தோண்டுகிறான்? வேலையே செய்யாதவன், இப்போது உழைப்பதற்கு என்ன காரணம்' என்று ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொண்டனர்.

அதை அறிந்த தந்தை, மூத்த மகனிடம் சென்ன தகவலை, மற்ற மூவரிடமும் கூறினார்.

அவர்களுக்கும் ஆவல் உண்டாயிற்று; ஆளுக்கு ஒரு மண்வெட்டி எடுத்துக் கொண்டு சென்று, தோண்டினார்கள்.

இரண்டு ஏக்கர் நிலத்தையும், இரண்டு மூன்று அடி ஆழத்துக்குத் தோண்டி விட்டார்கள். ஆனால், எதிர்பார்த்த குடமோ அகப்படவில்லை. கவலை உண்டாயிற்று.

"நம்முடைய சொத்து, நமக்குக் கிடைக்காமல் போகாது; இப்போது கிடைக்கா விட்டாலும், பிறகாவது கிடைக்கும். இரண்டு ஏக்கர் நிலத்தை தோண்டியதால் எவ்வித ந டமும் இல்லை. அதற்குப் பதிலாக, இப்போது வேர்க்கடலை பயிரிட்டால் நல்ல பலன் உண்டு; அது ஒரு குறுவைப் பயிர்; அதைப் பயிரிட்டால், மூன்று மாதங்களில் நல்ல லாபம் கிடைக்கும்" என்றார் தந்தை.

அவர் சொன்னபடியே, வேர்க்கடலை பயிரிட்டு, நல்ல லாபம் கிடைத்தது. தங்கள் உழைப்பு வீணாகவில்லை, புதைத்து வைத்தது கிடைக்கவில்லை என்றாலும், பயிரில் அதற்கு இணையாகப் பலன் கிடைத்ததை நினைத்தார்கள்.

தந்தையின் தூண்டுதல் இல்லாமலேயே, அவர்கள் நால்வரும் விவசாயத்தில் ஆர்வம் செலுத்தி, உழைத்து மகிழ்ந்தனர்.

மக்களை, விவசாயத்தில் எவ்வாறு அக்கறை கொள்ளச் செய்யலாம் என்று தான், செய்த தந்திரம், எளிதில் வெற்றி பெற்றதை நினைத்து, அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

*உழைத்து உண்பதில் காணும் மகிழ்ச்சியே மகிழ்ச்சி!*

# 26

# உயிர் பிழைத்த சிறுவன்

ஆற்றின் கரையில், ஒருவன் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அதுவே அவனுடைய தொழில், அவனுடைய முதுகு சிறிது வளைந்து இருந்தது.

அந்தப் பக்கமாகச் செல்லும் சிறுவர்கள், அவனைக் கூனன் என்று சொல்லி, கேலி செய்வார்கள். அதற்காக அவன் வருத்தப்படவில்லை. சிறுவர்களின் பேச்சைக் காதில் வாங்காமல், தன் காரியத்திலேயே கண்ணாக இருந்தான்.

ஒரு நாள் சிறுவர்கள் சிலர் கரையில் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன், ஆற்றில் குளித்தான். சிறிது தூரத்தில் இருந்த சுழலில் அவன் சிக்கிக் கொண்டு தவித்தான். அவனுக்கு நீச்சல் தெரியாது. மற்ற சிறுவர்களுக்கும் நீச்சல் தெரியாது. எதுவும் செய்ய முடியாமல் கூச்சலிட்டனர்.

அவர்கள் போட்ட கூச்சலைக் கேட்ட கூனன், வேகமாக ஓடி ஆற்றில் குதித்து, மூழ்கிக் கொண்டிருந்த சிறுவனைப் பிடித்து இழுத்துக் கரைக்குக் கொண்டு வந்தான்.

சிறுவன் குடித்திருந்த நீரை வெளியேற்றினான். அவன் உயிர் பிழைத்துக் கொண்டான்.

சிறுவர்கள் கூனனிடம் நன்றி கூறி, தங்களை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டனர். அது முதல் கூனன் என்று கேலி செய்வது இல்லை.

எவரையும் கேலியாகப் பேசக் கூடாது.

# 27

## வீட்டில் உள்ள பொருள் யாருக்கு?

ஒரு சிற்றூரில் இருந்த விவசாயி, தன்னுடைய வீட்டை, பக்கத்து ஊரில் வசித்த விவசாயிக்கு விற்றார்.

அந்த வீட்டை விலைக்கு வாங்கிய விவசாயி, வீட்டைச் சுத்தப்படுத்தி வெள்ளையடிப்பதற்காகச் சென்றார்.

அங்கே விட்டத்தில் இரண்டு செப்புக் குடங்கள் இருப்பதைக் கண்டார். ஆனால், அவற்றில் என்ன இருக்கிறது என்பதையும் அவர் பார்க்க வில்லை.

மறுநாள், வீட்டை விற்றவரிடம் சென்று, "விட்டத்தில் இரண்டு செப்புக் குடங்கள் இருக்கின்றன. வந்து எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் வீட்டை வாங்கியவர்.

"நான் வீட்டை விற்று விட்டதால், அதில் உள்ள பொருள்கள் உங்களுக்கே உரியன. அதை நான் எடுத்துக் கொள்வது நியாயம் அல்ல" என்றார் வீட்டை விற்றவர்.

"நான் வீட்டைத்தான் விலைக்கு வாங்கினேன்; அதில் உள்ள பொருள்களை நான் எடுத்துக் கொள்வது நியாயம் ஆகாது" என்றார் வீட்டை வாங்கியவர்.

இப்படியாக இரண்டு மாதங்கள் கடந்து விட்டன.

அதன் பின்னர், வீட்டின் விட்டத்தில் இருக்கும் இரண்டு செப்புக் குடங்களை எடுத்துக் கொண்டு போவதற்கு வந்தார் வீட்டை விற்றவர்.

"அது என்ன நியாயம்? அதில் உள்ள பொருள் எனக்குத் தானே சொந்தம். அதை நீங்கள் எடுத்துக் கொள்வது எப்படி நியாயம் ஆகும்?" என்றார் வீட்டை வாங்கியவர்.

"நான் வீட்டை மட்டுமே உங்களுக்கு விற்றேன், அதில் இருக்கும் பொருள்கள் என்னைச் சேர்ந்ததே. அதை நான் எடுத்துக் கொள்வதுதான் நியாயம்" என்று வாதாடினார் வீட்டை விற்றவர்.

இருவரும் ஊர்ப்பஞ்சாயத்தாரிடம் சென்று முறையிட்டனர். "வீட்டில் உள்ள பொருள், வீட்டை வாங்கியவருக்கே உரியது" என்று தீர்ப்புக் கூறினார் பஞ்சாயத்தார்.

இரண்டு மாதங்களில் அவர்களின் போககு எப்படி மாறிவிட்டது!

# 28

## நன்றி இல்லாதவன்

இளவரசன் ஒருவன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான்.

ஒரு மானைத் துரத்திக் கொண்டு வெகு தொலைவு சென்று விட்டான். அவனுக்குத் துணையாக வந்த காவலர்களைப் பிரிய நேர்ந்தது.

இருள் சூழ்ந்தது. அப்போது ஒரு சிங்கம் எதிரே வருவதைக் கண்டு, அருகில் இருந்த மரத்தின் மீது ஏறிப் பதுங்கிக் கொண்டான். அதே சமயம், அந்த மரத்தில் கரடி ஒன்று இருப்பதைக் கண்டு பயந்து நடுங்கினான்.

சிங்கத்திடமிருந்து தப்பி, கரடிக்குப் பலியாகப் போகிறேமே என்று கவலையில் ஆழ்ந்தான் இளவரசன். கரடி அவனுக்கு ஆறுதல் அளித்தது,

நள்ளிரவு ஆகியது. மரத்தடியில் இருந்த சிங்கம் நகரவே இல்லை, எப்படியும் இரை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காத்துக் கொண்டிருந்தது.

இளவரசன் சோர்வுற்று, தூக்கக் கலக்கத்தில் காணப்பட்டான்.

கரடி அவனைப் பார்த்து, "இளவரசனே! இருவரும் விழித்திருக்க வேண்டியதில்லை, முதலில் நீ தூங்கு, நீ கீழே விழுந்து விடாமல் உன்னை நான் பிடித்துக் கொண்டு விழித்திருக்கிறேன். பிறகு, நான் தூங்குகிறேன், நான் விழுந்து விடாமல் நீ பிடித்துக் கொள்; பொழுது விடிந்ததும் சிங்கம் போய் விடும்; நாமும் அவரவர் வழியில் போகலாம்" என்று கூறியது.

அது கூறிய யோசனைப்படி, இளவரசன் தூங்க முற்பட்டான்.

அப்போது சிங்கம் தன்னுடைய நயவஞ்சகத்தைக் காட்ட முனைந்தது.

"அன்புள்ள கரடியே! நாம் இருவரும் ஒரே இனம்! அவனோ நம் விரோதி; அவனை நீ காப்பாற்றலாமா? நான் போன பின், அவன் அம்பெய்து உன்னைக் கொன்று விடுவானே. மனித இனம் நன்றி பாராட்டாதது, எனவே அவனைக் கீழே தள்ளிவிடு, என் பசியைத் தீர்த்துக் கொண்டு போகிறேன், உனக்கும் பயம் அகன்று விடும், என்று தேனொழுகக் கூறியது சிங்கம்.

"ஏ சிங்க ராஜனே! நன்மையோ தீமையோ நான் அவனுக்கு வாக்கு கொடுத்து விட்டேன். அதனால், அவனுக்குத் தீங்கு செய்ய மாட்டேன்" என்று மறுத்து விட்டது கரடி.

தன் தந்திரம் பலிக்காமல் போகவே சிங்கம் அமைதியாகி விட்டது.

இளவரசன் கண்விழித்தான். சிங்கத்துக்கும் தனக்கும் நடந்த உரையாடலை அவனிடம் கூறிவிட்டு, கரடி கண் அயர்ந்தது.

கரடியிடம் தன் தந்திரம் பலிக்காமல், ஏமாந்து போன சிங்கம் இளவரசனிடம் முயன்றது.

"எனக்குப் பயந்து நீ மரத்தில் ஏறிவிட்டாய். ஆனால், கரடியிடம் இருந்து தப்ப முடியாது. நான் போனபின், கரடி உன்னைக் கொன்றுவிடும். நீ உயிர் பிழைக்க வேண்டுமானால் கரடியைக் கீழே தள்ளிவிடு" என்று நயவஞ்சகமாகக் கூறியது சிங்கம்.

அது சொன்னதை நம்பி, தன் உயிரே தனக்குப் பெரிது என்று எண்ணி, கரடியைக் கீழே தள்ள முற்பட்டான் இளவரசன்.

அரைகுறைத் தூக்கத்தில் இருந்த கரடி, மற்றொரு கிளையைப் பிடித்துக் கொண்டு கீழே விழாமல் தப்பித்துக் கொண்டது.

இளவரசனின் நம்பிக்கைத் துரோகத்தைக் கண்டு கரடி வருந்தியது

"அடே துரோகி! நட்பு எத்தகையது என்பதை உணராமல், கலக்கமுற்று, துரோகம் செய்ய முற்பட்டு விட்டாய். அதனால், உன் புத்தியும் அடியோடு கலங்கி அலைவாய்" என்று சபித்தது கரடி.

இளவரசனின் மனச் சாட்சி உறுத்தியது. பைத்தியம் பிடித்தவனைப் போல் ஆனான்.

# 29

## ஏமாந்த ஓநாய்

ஒரு கிராமத்தில் பசியோடு அலைந்து கொண்டிருந்தது ஓர் ஓநாய். உணவு எதுவும் கிடைக்க வில்லை.

கிராமத்தின் கோடியிலிருந்த குடிசைக்கு அருகில் வந்து கொண்டிருந்தது.

குடிசையினுள் சின்னஞ்சிறு பையன் அழுது கொண்டிருந்தான்.

கிழவி எவ்வளவோ சமாதானப்படுத்தியும், பையனின் அழுகை நிற்க வில்லை.

“நீ அழுகையை நிறுத்தாவிடில், உன்னை ஓநாயிடம் தூக்கிப் போட்டு விடுவேன்” என்று பலமுறை சொல்லி பயமுறுத்தினாள் கிழவி. அதைக் கேட்டதும் ஓநாய் மேற்கொண்டு செல்லாமல், குடிசைக்கு வெளியே படுத்து விட்டது.

கிழவி, பையனை எப்பொழுது வெளியே போடுவாள் என்று ஓநாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

இரவு வெகுநேரம் அகிவிட்டது. ஓநாயோ காத்துக் கொண்டிருந்தது.

திடீரென்று குடிசைக்குள்ளிருந்து கிழவியின் குரல் கேட்டது.

“என் கண்ணே நீ தூங்கு! உன்னை ஓநாயிடம் போட மாட்டேன். அந்த ஓநாய் இந்தப் பக்கம் வரட்டும் அதை அடித்துக் கொன்று விடுவோம்.” என்றாள் கிழவி.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஓநாய், “மக்கள் பேசுவது ஒன்று; செய்வது வேறாக இருக்கிறதே” என்று எண்ணிக் கொண்டே எழுந்து, கிராமத்தை விட்டு வெளியேறியது.

# 30

# பொய் சொன்ன வியாபாரி

வியாபாரி ஒருவன் பயணம் செல்லும்போது, தன்னுடைய பணப்பையை இழந்து விட்டான்.

தன்னுடைய பணப்பையில் இரண்டாயிரம் ரூபாய் வைத்திருந்ததாகவும், அதைக் கண்டுபிடித்துக் கொடுப்பவருக்கு, 500 ரூபாய் பரிசு அளிப்பதாகவும் அறிவித்தான். ஒரு தொழிலாளியின் கையில் அந்தப் பை அகப்பட்டது.

அதைக் கொண்டு போய் வியாபாரியிடம் கொடுத்தான். ஆனால், அந்த வியாபாரிக்கு 500 ரூபாய் பரிசு கொடுக்க மனம் வரவில்லை.

"என் கையில் பணத்துடன் ஒரு வைர மோதிரம் இருந்தது. அதைக் கொண்டு வந்து கொடுத்தால், நான் அறிவித்தபடி 500 ரூபாய் தருகிறேன்" என்று பொய் சொன்னான். வியாபாரி.

தொழிலாளி, நீதிமன்றத்தில் முறையிட்டான்.

வியாபாரியைப் பார்த்து நீதிபதி, 'உன்னுடைய பையில் 2000 ரூபாய் இருந்ததாகவே அறிவித்தாய். வைர மோதிரமும் இருந்ததாக இப்போது கூறுகிறாய். ஆகையால், தொழிலாளி கண்டு எடுத்த பையில் வைர மோதிரம் இல்லை. எனவே, இந்தப் பை உன்னுடைய பையாக இருக்க முடியாது. அதனால், இந்தப் பை, யாருடையது என்று தெரியும் வரை நீதிமன்றத்திலேயே இருக்கட்டும். மறுபடியும், நீ விளம்பரம் செய்; வைர மோதிரத்துடன் கூடிய உன் பை ஒருவேளை அகப்படலாம்!" என்று தீர்ப்புக் கூறினார்.

வியாபாரி தான் கூறிய பொய்யை உணர்ந்து, மன்னிப்புக் கேட்டு, தொழிலாளியிடம் 500 ரூபாயைக் கொடுத்துவிட்டுத் தன் பையைப் பெற்றுக் கொண்டான்.

# 31

## சிறுவனின் புத்திசாலித்தனம்

ஒரு கிராமத்தில் புரோகிதர் ஒருவர் வசித்து வந்தார். அவருக்குப் பூர்வீகமாக சிறிது நிலம் இருந்தது. அந்த நிலத்துக்கு வரி செலுத்த வில்லை. அதனால் மாவட்ட ஆட்சியாளர் ஆணையின்படி, புரோகிதரை சிறையில் அடைத்தனர். புரோகிதரின் தந்தை இறந்து ஒருவருடம் ஆயிற்று. அந்த

நினைவுக்காக, சமூக வழக்கப்படி, சடங்குகள் செய்வது வழக்கம்.

புரோகிதரோ சிறையில் இருக்கிறாரே எப்படிச் செய்வது?

"ஊராருக்கெல்லாம் நினைவுபடுத்தி, சடங்குகள் செய்வாரே; அவருடைய தந்தைக்குச் சடங்கு செய்ய முடியாமல் அவர் சிறையில் அடைபட்டுக் கிடக்கும்படி ஆயிற்றே" என்று புரோகிதரின் மனைவி அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

புரோகிதருக்கு ஒரு மகன் இருந்தான். அவனுக்கு வயது பன்னிரண்டு. பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான்.

விடிந்தால் சடங்கு நாள். தாயின் துக்கத்தையும், தந்தையின் நிலையையும் நினைத்து, இரவு முழுதும் தூங்காமலேயே யோசனை செய்தபடி இருந்தான் சிறுவன்.

விடியற்காலையில் எழுந்து, நடந்தே பத்து மைல் தொலைவில் இருந்த மாவட்ட ஆட்சியாளர் பங்களாவை அடைந்தான்.

ஆட்சியாளரின் காலடியில் விழுந்து வணங்கினான்; கண்ணீர் ததும்ப நிலமையைப் பணிவோடு கூறினான் சிறுவன்.

"உன் கோரிக்கையை ஏற்று உன் தந்தையை மூன்று நாள் மட்டும் விடுவிக்கிறேன். அதற்கு யாராவது ஜாமீன் கொடுக்க வேண்டும்" என்றார் ஆட்சியாளர்.

"ஜாமீன் கொடுக்க, எங்களுக்கு எவருமே முன்வர மாட்டார்கள். ஒரே ஒரு வழிதான் உண்டு. என் தந்தை திரும்பி வரும்வரையில் அந்த மூன்று நாட்களுக்கும் நான் சிறையில் இருக்கிறேன்" என்றான் சிறுவன்.

பன்னிரண்டு வயது சிறுவனிடமிருந்து கிடைத்த பதில் ஆட்சியாளரின் உள்ளத்தை நெகிழச் செய்து விட்டது.

உடனே, ஜாமீன் இல்லாமலேயே, புரோகிதரை மூன்று நாட்கள் விடுதலை செய்ய உத்தரவிட்டார் ஆட்சியாளர்.

தந்தையும், மகனும் கிராமத்துக்கு விரைந்து வந்து, நடத்த வேண்டிய சடங்குகளை செய்து முடித்தனர்.

கிராம மக்கள் அனைவரும் சிறுவனைப் பாராட்டினார்கள்.

புரோகிதர் மூன்று நாட்களுக்குப் பிறகு மீண்டும் சிறை சென்றார்.

# 32

## யானையை ஏமாற்றிய நரி

ஒரு காட்டில் பல நரிகள் வசித்தன. அவை தின்பதற்கு சின்னஞ்சிறு விலங்குகளும், பறவைகளும் கிடைக்கவில்லை. நரிகள் பட்டினியால் வாடின.

கிழட்டு நரிக்கு ஒரு யோசனை தோன்றியது.

சிறிது தொலைவு சென்று ஒரு யானையைக் கண்டது.

கிழட்டு நரி, சிறிது தூரத்தில் நின்று கொண்டே, "மிகப் பெரிய வல்லமை வாய்ந்த யானையே! உங்களின் தகுதிக்கு ஏற்ப, பெரிய பதவி தருவதற்காக தங்களை அழைத்துச் செல்ல நான் வந்துள்ளேன்.

அதாவது, "எங்களுக்கு ஓர் அரசன் இருந்தான். அவன் மிகவும் தீயவனாகி, எங்களால் இயலாத பணிகளை எல்லாம் செய்யும்படி ஏவி, தொல்லை கொடுத்தான், ஆகையால், அவனை ஒதுக்கி விட்டு, வேறு ஓர் அரசனை தேர்ந்தெடுக்கத் தீர்மானித்து உள்ளோம். எங்கள் இனத்தவர்கள் உங்களை அழைத்து வருமாறு என்னை அனுப்பி வைத்திருக்கிறார்கள். எங்களுடன் வாழ்வது உங்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும். நீங்கள் இடும்

கட்டளைகளை எல்லாம் பணிவோடு நிறைவேற்றுவோம். உங்களை மதிப்புடன் நடத்துவோம். ஆகையால், நீங்கள் எங்கள் ராஜ்யத்திற்கு வரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டது.

யானைக்கு மகிழ்ச்சி உண்டாகி, கிழட்டு நரியுடன் புறப்பட்டது.

வழியில், ஒரு சதுப்பு நிலத்தில் யானையின் கால்கள் சேற்றிலே அழுந்தி விட்டன. யானையால் வெளியேற முடியவில்லை.

அப்பொழுது நரி, யானையைப் பார்த்து, இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? உங்கள் கட்டளையை நிறைவேற்ற காத்திருக்கிறேன்" என்று கூறியது.

"இந்தச் சேற்றிலிருந்து என்னை வெளியே இழுக்க வேண்டும் இதுதான் என் கட்டளை!" என்று சொல்லியது யானை.

நரி சிரித்துக் கொண்டே, "உங்கள் தும்பிக்கையால் என் வாலைப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் உடனே வெளியே இழுத்து விடுகிறேன்" என்று கூறியது.

"உன்னுடைய வாலால் என்னை வெளியே இழுக்க முடியும் என்று எண்ணுகிறாயா?" என்று கேட்டது யானை.

"அது இயலாத செயல் என்றால், அதைச் செய்யுமாறு எனக்கு ஏன் கட்டளையிட்டீர்கள்? இந்த மாதிரிக் கட்டளையிட்டதற்காகத் தானே பழைய அரசனை நாங்கள் விரட்டி விட்டோம்!" என்றது கிழட்டு நரி.

யானை சேற்றிலிருந்து வெளியேற முடியாமல், துன்புற்று இறந்தது.

நரிகள் எல்லாம் வந்து, யானையைத் தின்று விட்டன!

புதியவர்களின் ஆசை வார்த்தையை நம்பி ஏமாறக் கூடாது.

# 33

## கிராமவாசியின் பெருந்தன்மை

கிராமத்திலே படித்து, பட்டணத்தில் வேலையில் இருந்தான் ஒருவன். அவன் பெற்றோர் பல ஆண்டுகளுக்கு முன்னே இறந்து விட்டனர். அவனுக்கு வீடும் கிடையாது. உறவு என்று செல்ல ஒருவன் மட்டுமே இருந்தான். இருவரும் ஒத்த வயதினர்.

மூன்று, நான்கு ஆண்டுகளுக்குப் பின் கிராமத்துக்கு வந்து உறவினன் வீட்டில் தங்கினான்.

அவர்கள் இருவரும் இளம் வயது முதல் சமீப காலம் வரை பல விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது, "கிராம வாசிகள் எளிதில் ஏமாந்து விடுவார்கள்" என்றான் பட்டணவாசி.

"ஏமாறுவார்கள் என்று சொல்ல இயலாது; கள்ளம், கபடம் இல்லாத பெருந்தன்மை வாய்ந்தவர்கள்" என்றான் கிராமவாசி.

ஊரைச் சுற்றிப் பார்த்து வருவதாக புறப்பட்டான் பட்டணவாசி.

வாரச்சந்தை நடக்கும் இடத்தில், நின்று, கீழே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான் பட்டணவாசி.

ஒவ்வொருவராக அவனைச் சுற்றி கூட்டம் கூடிவிட்டது.

"ஏதாவது தொலைந்து விட்டதா?" என்று அவர்கள் கேட்டனர்.

"ஆம், அரை பவுன் மோதிரம் விரலிலிருந்து விழுந்து விட்டது" என்றான் பட்டணவாசி.

அருகில் நின்றவர்கள் பலர் சுற்று முற்றும் தேடலானார்கள்.

அதற்குள் அவன் தங்கியிருந்த உறவினனுக்குத் தகவல் எட்டி, அவனும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தான். விசாரித்தான். இருவரும் வீட்டுக்குச் சென்றனர்.

"நியாயமாகச் சம்பாதித்திருந்தால் பொருள் கிடைக்கும்" என்றான் ஒருவன்.

"கீழே விழுந்த பொருள், எங்கேயாவது கிடைத்தது உண்டா?" என்றான் மற்றொருவன்.

"அவனுக்கு என்ன பட்டணவாசி, அங்கே போய், வேறு மோதிரம் வாங்கிப் போட்டுக் கொள்வான்" என்றான் வேறொருவன்

இப்படியாக பலர் பேசலானார்கள்.

"இரவு நான் புறப்படுகிறேன். எனக்கு ஐநூறு ரூபாய் கடனாகக் கொடு; போனதும் அனுப்புகிறேன்" என்றான் பட்டண வாசி.

ஐயோ பாவம்! அவன் தான் மோதிரத்தைத் தொலைத்து விட்டானே அவனுக்குக் கொடுக்காமல் இருக்கலாமா? பெருந்தன்மையோடு, "என்னிடம் நூறு ரூபாய் தான் இருக்கிறது" என்று கூறி, நூறு ரூபாயைக் கொடுத்தான் கிராமத்து உறவினன்.

*பட்டணத்தானின் மோதிரம் தொலைந்தது உண்மையோ, பொய்யோ என்று பாராமல் கிராமத்து நண்பன் பெருந்தன்மையோடு நடந்து கொண்டான்.*

# 34

## ஆட்சியாளரின் பிரச்சார தந்திரம்

ஒரு கிராமத்தில் மரம் நடு விழாவுக்காக அரசு விழா ஏற்பாடாகி இருந்தது.

அரசு அதிகாரிகள் தடபுடலாக அங்கும் இங்கும் போய் வந்தனர்

விழாவுக்காக பெரிய பந்தல் போடப் பட்டிருந்தது.

மாவட்ட அதிகாரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் கூடி இருந்தனர்.

அமைச்சர் வந்தார் எல்லோரும் அவருக்கு மாலை அணிவித்து, சால்வை அணிவித்து வரவேற்றனர்.

அமைச்சர் சில வார்த்தைகள் பேசினார். பிறகு "மரம் நடுவது எந்த இடத்தில்?" என்று கேட்டார்.

ஆளுக்கு ஒரு இடத்தைக் காட்டிச் சொன்னார்கள் அதிகாரிகள்.

"முதலிலேயே தீர்மானித்திருக்க வேண்டாமா?" என்று அமைச்சர் கடிந்து கொண்டார்.

உள்ளூர் பெரியவர் ஒருவர் எழுந்து, ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டி, "இதுவே ராசியான இடம்! ஏனென்றால், இதிலே தான் எத்தனையோ அமைச்சர்கள் வந்து பல ஆண்டுகளாக, மரம் நட்டுவிட்டுப் போவது வழக்கம்." என்றார்.

எந்த மரமும் அந்த பொட்டலில் வளர்ந்தது இல்லை!

எல்லாமே அரசாங்கத்தின் சுயநல பிரச்சார தந்திரம் என்பதை மக்கள் அறியாமல் இல்லை.

# 35

# இரண்டுக்கு ஒன்று இலவசம்

'இரண்டு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு திருப்பதிக்குச் செ ன்று மொட்டை போட்டு வருமாறு' கணவனிடம் சொன்னாள் மனைவி.

"நான் வந்தால் செலவு கூடுதலாகும் என்பதால், உங்களை மட்டும் அனுப்புகிறேன். வேறு செலவு எதையும் செய்ய வேண்டாம்; என்று கூறி. புளியோதரை கட்டிக் கொடுத்து, கணவனை அனுப்பி வைத்தாள் மனைவி.

கணவன் இரண்டு பிள்ளைகளுடன் திருப்பதி சென்று, சவரத் தொழிலாளியிடம் உட்கார வைத்தான். அவன் இருபிள்ளை களுக்கும் மொட்டை அடித்து விட்டான். கட்டணத்தைக் கொடுத்தான் பிள்ளைகளின் தந்தை.

"நீயும் வந்து உட்கார்! உனக்கும் மொட்டை போட்டு விடுகிறேன்" என்றான் சவரத் தொழிலாளி.

"எனக்கு வேண்டாம்; என்னிடம் அதற்குப் பணம் இல்லை என்றான்" அவன்.

"இரண்டு மொட்டை போட்டால், ஒரு மொட்டை இலவசம்!" என்றான் சவரத் தொழிலாளி.

"இலவசம் என்று அவன் சொன்னதும், அவனும் உட்கார்ந்து", மொட்டை போட்டுக் கொண்டான்.

வீட்டுக்குத் திரும்பினர், மூன்று மொட்டைகளையும் கண்டாள் மனைவி. கோபம் கொண்டு, "நீங்கள் ஏன் மொட்டை போட்டுக் கொண்டீர்கள்? இரண்டு ரூபாய் அதிகச் செலவு ஆயிற்றே" என்று சத்தம் போட்டாள் மனைவி.

கணவன் அமைதியாக, "இரண்டு மொட்டைக்கு, ஒரு மொட்டை இலவசம்" என்றான் சவரத் தொழிலாளி. அதனால் நானும் மொட்டை போட்டுக் கொண்டேன்" என்றான்.

மனைவி அமைதியானாள்.

*'இலவசம்' என்றாலே சிலருக்கு மகிழ்ச்சி உண்டாகும்.*

# 36

# எல்லோருக்குமே 'பேப்பே' தான்!

செட்டியார் ஒருவர் பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தார்

கரும்புகளையும், நெல்லையும் கொள்முதல் செய்தார். ஆலைகளுக்கு மாட்டு வண்டியில் ஏற்றி அனுப்பிக் கொண்டிருந்தார். அது கௌரவமாகத் தோன்றவில்லை. அதனால் இரண்டு லாரிகள் வாங்கி அதில் சரக்குகளை அனுப்பிக் கொண்டிருந்தார். நல்ல லாபமும் கிடைத்தது.

சில மாதங்களுக்குப் பிறகு, இரண்டு லாரிகளும் விபத்துக்குள்ளாகி, பெருத்த சேதம் ஆயின.

கரும்பு அனுப்புவதும் தடைப்பட்டது. நெல் விலையும் குறைந்தது. வியாபாரம் சரியாக நடைபெறவில்லை. பெருத்த நட்டம் உண்டாயிற்று. கடன்களை செலுத்த முடியவில்லை, செட்டியார் திணறினார். தன்னுடைய நண்பர் வழக்கறிஞரிடம் சென்று, நிலைமையைக் கூறி, அவரிடம் ஆலோசனை கேட்டார் செட்டியார்.

அவர், " இந்தக் கடன் தொல்லையிலிருந்து மீள ஒரு வழி உண்டு;

உங்கள் குடும்பத்தை சொந்த ஊருக்கு அனுப்பிவிட்டு, நீங்கள் மட்டும் இருங்கள். யாரிடமும் எதுவும் பேசாமல், என்ன கேட்டாலும், 'பேப்பே' என்று மட்டும் சொல்லுங்கள்". என்று ஆலோசனை கூறினார்.

செட்டியாருக்கும் அது சரியான யோசனை என்று தோன்றியது.

கடன் கொடுத்தவர்கள் வந்து கேட்டார்கள்

செட்டியார் கவலைப்பட்டு, முகத்தைச் சுளித்துக் கொண்டு, 'பேப்பே' என்று சொல்லலானார்.

"பாவம், செட்டியாருக்கு ஏற்பட்ட நஷ்டத்தினால், அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. அவரை தொந்தரவு படுத்தக்கூடாது என்று எண்ணி கடன் கொடுத்தவர்கள் பிறகு வருவதே இல்லை.

செட்டியார் நிம்மதியானார். பல மாதங்களுக்குப் பிறகு, வழக்கறிஞர் வந்து, "இப்பொழுது எப்படி இருக்கிறீர்? எனக்கு ஆலோசனை கட்டணம் தாருங்கள்" என்று கேட்டார்.

அதற்கு செட்டியார் 'பேப்பே' என்றார். வேறு எதுவும் பேசவில்லை.

"எனக்குமா 'பேப்பே' என்று கேட்டார்" வழக்கறிஞர்.

"உமக்கும் 'பேப்பே', உங்க அப்பனுக்கும் 'பேப்பே' என்றார்" செட்டியார்.

வழக்கறிஞர் மிகுந்த வருத்தத்தோடு, "தீட்டின மரத்தையே பதம் பார்க்கிறான் செட்டி" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

மற்றவர்களை ஏமாற்றும்படி சொல்லிக் கொடுத்த யோசனைப்படி, அவரையும் ஏமாற்றினார்.

# 37

## மாப்பிள்ளை வீட்டார் செய்வது என்ன?

ஒரு ஊரிலிருந்து மாப்பிள்ளையின் பெற்றோர், அடுத்த ஊரில் இருந்த பெண் வீட்டிற்கு திருமணம் பேசுவதற்குச் சென்றனர். மாப்பிள்ளையின் தந்தை, "உங்கள் பெண்ணுக்கு என்னென்ன சீர்வரிசை செய்வீர்கள்?" என்று பெண்ணின் தந்தையிடம் அதிகார தோரணையில் கேட்டார்.

பெண்ணின் தந்தை மிகவும் பலவீனமான குரலில், "கழுத்துச் சங்கிலி, தோடு, மோதிரம் எல்லாம் பதினைந்து பவுனுக்குள் போடுகிறோம்" என்றார். மற்றும், "மாப்பிள்ளைக்குச் சரிகை வேட்டி, பட்டுச் சட்டை, சரிகைத் துண்டு முதலியன தருகிறோம்". என்றார் பெண்ணின் தந்தை.

"மாப்பிள்ளைக்கு என்ன செய்வீர்கள்? ரொக்கம் எவ்வளவு தருவீர்கள்?" என்று வீராப்புடன் கேட்டார் மாப்பிள்ளையின் தந்தை.

"எங்களால் வேறு எதுவுமே செய்ய இயலாது, இப்போது எங்களிடம் வசதி இல்லை" என்று தயங்கியபடி சொன்னார். பெண்ணின் தந்தை

மாப்பிள்ளையின் பெற்றோர் முகத்தைச் சுளித்தனர்.

அருகில் இருந்த அவர்கள் பேசியவற்றைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான் பெண்ணின் தம்பி.

அவன் மாப்பிள்ளையின் பெற்றோரிடம், "அது சரி, நாங்கள் இவ்வளவும் போடுகிறோம், நீங்கள் என்ன போடுவீர்கள்?" என்று கேட்டான்.

மாப்பிள்ளையின் தாய், சிரித்துக் கொண்டே, "நீங்கள் தந்த பட்டியலில் ஏதேனும் விட்டுப் போயிருந்தால், அதற்காகச் சண்டைபோடுவோம்" என்றாள்.

அடுத்து, மாப்பிள்ளையின் தந்தை "நீங்கள் போட்ட நகைகள் அனைத்தும் எடை சரியாக இருக்கிறதா என்று நிறுத்துப் பார்ப்போம்" என்றார்.

இப்படி, "அவ நம்பிக்கையான உங்கள் வீட்டுச் சம்பந்தம் எங்களுக்குத் தேவையே இல்லை" என்று கூறிவிட்டனர் பெண்ணின் பெற்றோர்.

பெண் வீட்டாரிடம் எவ்வளவு கொள்ளையடிக்க முடியும் என்பதே மாப்பிள்ளை வீட்டாரின் திட்டம்.

# 38

## முன்போலவே பழைய காகித விற்பனை

ஒருவன் தெருத் தெருவாகச் சென்று, பழைய பேப்பர்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருள்களை வாங்கி, கடையில் விற்று, அந்த வருமானத்தில் சாப்பிட்டு வந்தான்.

சில மாதங்களில் அவனுக்குக் கொஞ்சம் பணம் சேர்ந்தது.

பழைய பேப்பர் வியாபாரத்தை விட்டு விட்டு, கண்ணாடிப் பாத்திரங்களை வாங்கி, கூடையில் வைத்து வியாபாரம் செய்யலானான்.

ஒரு நாள் மிகவும் களைத்துப் போய், கூடையை தரையில் வைத்து விட்டு, இளைப்பாறினான். அப்படியே கண் அயர்ந்தான். அதோடு அப்படியே கற்பனையில், மனக் கோட்டை கட்டத் தொடங்கினான். "பழைய பேப்பர் வியாபாரத்தில் கொஞ்சமாகத் த

தான் லாபம் கிடைத்தது, இப்பொழுது, கண்ணாடிப் பாத்திர வியாபாரத்தில், கூடுதலாக லாபம் வருகிறது. இன்னும் ஒரு வருடத்தில் ஒரு கடையைத் தொடங்கி, உட்கார்ந்தபடியே, வியாபாரம் நடத்தலாம். கிடைக்கிற லாபத்தில், ஒரு சிறிய வீடு வாங்கலாம். அதன் பின், திருமணம் செய்து கொள்ள வேண்டியது தான். என்ன ஆனாலும். மாமாவின் மகளைத் தான் கட்டிக் கொள்ள வேண்டும்.

அவள் என்னிடம் பணிவோடு கனிவாக நடக்காமல் கர்வத்துடன் நடந்து கொண்டால், 'போடி! உங்க அப்பன் வீட்டுக்கு என்று காலால் ஒரு உதை கொடுப்பேன்" என்று எண்ணிக் கொண்டு, ஒரு உதை விட்டான். எதிரே காலடியில் கூடையில் இருந்த கண்ணாடிப் பாத்திரங்கள் எல்லாம் உடைந்து சிதறின.

சத்தம் கேட்டு விழித்துப் பார்த்தான், அவ்வளவும் நொறுங்கிப் போய்விட்டன. அதைக் கண்டு வருந்தி அழுதான்.

*பழையபடி பழைய பேப்பர் வாங்கி விற்கத் தொடங்கினான்.*

# 39

## வெற்றி பெறுவது எப்படி?

ஞானமும், துணிவும், உறுதியும் கொண்ட அரசன் ஒரு நாட்டை ஆட்சி செய்து வந்தான்.

ஒரு நாள் அரசன் வேட்டையாடுவதற்காகச் சென்றான். அடர்ந்த காட்டில், அந்தணன் ஒருவன் வில்வப்பழங்களை வைத்துக் கொண்டு, யாகம் வளர்த்துக் கொண்டிருந்தான்.

அதைப் பார்த்த அரசன் அந்தணனை அணுகி, ஏதோ கேட்க எண்ணினான். பிறகு, எதுவும் கேட்காமலேயே திரும்பிச் சென்றான்.

வெகு நேரம் வேட்டையாடிவிட்டு, திரும்பினான் அரசன்.

அப்போதும் அந்தணன் மிகத் தீவிரமாக யாகத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டான் அரசன்.

அந்தணனை அணுகி, "இந்த வில்வப் பழங்களைக் கொண்டு நீ யாகம் செய்வதன் நோக்கம் என்ன?" என்று கேட்டான் அரசன்.

"அக்கினி தேவன் எனக்குக் காட்சி அளித்து வரம் அளிப்பதுடன், யாககுண்டத்திலிருந்து ஒரு தங்க வில்வப் பழமும் கிடைக்கும். அதற்காகவே, காலையிலிருந்து யாகம் செய்து கொண்டிருக்கிறேன். காட்சியும் கிடைக்க வில்லை, காரணமும் தெரியவில்லை" என ஏக்கத்தோடு கூறினான் அந்தணன்.

"அப்படியானால் ஒரு வில்வப் பழத்தை என்னிடம் கொடு, உனக்காக நான் யாகத்தில் ஈடுபடுகிறேன்" என்றான் அரசன்.

அதற்கு அந்தணன், மிக அலட்சியமாக, மனத்தூய்மையும், பக்தியும் இருந்தால்தான், அக்கினி தேவனைக் காண இயலும். புனிதத்துடன் பக்தியுடன் காலையிலிருந்து தவம் இருக்கிறேன். எனக்கே காட்சி கிடைக்கவில்லை, உனக்கு மட்டும் எவ்வாறு கிடைத்து விடும்?" என்று கர்வத்துடன் கூறினான்.

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம், என்னிடம் ஒரு பழத்தைக் கொடு" என்று கேட்டுப் பெற்றுக் கொண்டான் அரசன்.

மனதை ஒரு நிலைப்படுத்தி, (வேறு எண்ணங்களில் சிதற விடாமல்) "அக்கினி தேவனே! இதோ இந்த வில்வப் பழத்தை உனக்கு அளிக்கிறேன்; உனக்குக் கருணை உண்டாகவில்லை என்றால், என் தலையை உனக்கு அளிக்கப்போகிறேன்" என்று கூறி தன் கையில் இருந்த வில்வப்பழத்தை யாக குண்டத்தில் போட்டான் அரசன்.

மறு நொடியில் தங்க வில்வப்பழம் ஒன்று தோன்றியது. அதைத் தொடர்ந்து அக்கினி தேவனும் தோன்றினான். "உனக்கு என்ன வரம் வேண்டும்? என்று கேட்டான் அரசனிடம்.

அரசன் அக்கினி தேவனை வணங்கி, "இதோ நிற்கும் அந்தணன் நினைப்பதுபோல் கிடைக்க வேண்டும் என்பதுதான் தாங்கள் அருள வேண்டிய வரம்" என்று அந்தணனுக்காகப் பரிந்து வேண்டினான் அரசன்.

"அப்படியே ஆகக் கடவது. மேலும், நீயும் செழிப்போடு வாழ்வாயாக! உன் அரண்மனைக் கருவூலம் எப்பொழுதும் நிறைந்தே இருக்கும்" என்று அரசனுக்கு (அந்தணனுக்கும் சேர்த்து) வரம் அருளினான்.

அதைக்கண்டு வியப்புற்ற அந்தணனுக்கு பொறாமையும் உருஎடுத்தது "அக்கினி தேவனே! நான் வெகு நேரமாகத் தவம் செய்து கொண்டிருந்தேன். எனக்குக் காட்சி அளிக்கவில்லை. அரசனுக்குச் சிறிது நேரத்திலேயே காட்சி அளித்தீரே! அது ஏன்?" என்று கேட்டான் அந்தணன்.

"அந்தணனே! உலகில் வலிமைமிக்க ஆற்றலுக்கே விரைவில் வெற்றி கிட்டும். தவிர, உன்னைப் போன்ற சுயநலம் கொண்ட மந்தபுத்தியுள்ள சோம்பேறிக்கு அவ்வாறு கிடைக்காது. மற்றும் கர்வமும், அலட்சியமும், பொறாமையும் உன்னிடம் குடிகொண்டு உள்ளது என்று கூறி, அக்கினிதேவன் மறைந்து விட்டான்.

*(அக்கினி தேவன் தோன்றுகிறாரோ இல்லையோ) வலிமைமிக்க ஆற்றல், உறுதியான உள்ளம், சுயநலமின்மை, பிறருக்காக வேண்டுதல் இவை இந்தக் கதையில் சிறந்து விளங்குகின்றது*

# 40

## கணவனை பயமுறுத்தும் மனைவி

ஒரு ஊரில், கணவனும் மனைவியும் வாழ்ந்து வந்தனர். கணவன் ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வருமானம் மிகவும் குறைவாகவே கிடைத்துக் கொண்டிருந்தது.

'அடுத்த வீட்டில், எதிர்வீட்டில் அந்தப் பொருள் வாங்கியுள்ளனர்', 'நாம் இப்படி எந்தப் பொருளும் வாங்காமல் ஏழ்மை நிலையில் இருக்கிறோமே', நமக்கு எப்போதுதான் நல்ல காலம் வரப்போகிறதோ என்று மனைவி சதா புலம்பிக் கொண்டிருந்தாள்.

இப்போது நாம் பட்டினி கிடக்காமல், ஏதோ வயிறாரச் சாப்பிடுகிறோம் அல்லவா? அதை நினைத்து, மகிழ்ச்சியாக இருப்பதே நல்லது என்று கணவன் ஆறுதலாகக் கூறுவான்.

மனைவி அதை ஏற்காமல், அவனை நச்சரித்துக் கொண்டே இருந்தாள்.

அவன் ஒருநாள் பொறுமை இழந்து, "உன் தாய் வீட்டுக்குப் போய், சில நாட்கள் தங்கியிருந்து வந்தால் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. மாற்றம் மகிழ்ச்சியைத் தரும்" என்றான்.

அதைக் கேட்டதும், அவள் பெரிய கூச்சல் போடலானாள், "என்னை, என் தாய் வீட்டுக்கு ஒட்டிவிட்டு, எவளையாவது ஒருத்தியைக் கூட்டி வந்து கும்மாளம் அடிக்கப் பார்க்கிறாயா?" என்று கத்தினாள். அத்துடன் "இதோ கிணற்றில் போய் விழுகிறேன்" என்று கூவிக் கொண்டு கொல்லையில் இருக்கும் கிணற்றுக்கு விரைந்தாள்.

வேகமாய்ப் போனவள் அப்படியே கிணற்றடியில் நின்று, கணவன் வருகிறானா? என்று சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு திரும்பி விட்டாள்.

கணவனுக்கும் உள்ளூறச் சிறிது பயம் இருந்தது, அவள் கிணற்றில் விழுந்து இறந்து விட்டால், தான் தள்ளிவிட்டதாக ஊரார் அவதூறு கூறினால் என்ன செய்வது? என்ற அச்சம் அவனைவிட்டு அகலவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு, "எதிர் வீட்டில் உள்ள அம்மா வெளியூரில் இருந்து புடவைகள் வாங்கி வந்து விற்கிறாள். மாதா மாதம் இருபது ரூபாய் கொடுத்தால் போதும்" என்றாள் மனைவி.

இப்போது நமக்கு வரும் வருமானத்தைக் கொண்டு வாழவேண்டிய சிரமமான நிலைமை உள்ளது. இன்னும் புடவைக் கடன் வேறு மாதம் இருபது ரூபாய்க்கு எங்கே போவது? பிறகு பார்க்கலாம்" என்றான் கணவன்.

"ஒரு புடவை வாங்கித் தருவதற்கு வக்கில்லை, என்ன வாழ்க்கை இது? நான் கிணற்றில் விழுந்து செத்துப் போகிறேன்" என்று கிணற்றடிக்கு ஓடினாள் மனைவி.

கணவன் பேசாமல் உட்கார்ந்திருந்தான். சிறிது நேரத்தில் அவள் திரும்பி வந்து விட்டாள்.

மறு நாள், தனக்கு சம்பளத்தைக் கொஞ்சம் கூட்டித் தரும்படி முதலாளியிடம் கேட்டுக் கொண்டான் அவன். மேலும், தன் மனைவியின் நச்சரிப்பு தாங்க முடியவில்லை. அடிக்கடி என் மனைவி, "கிணற்றில் விழுந்து விடுவேன்" என்று கிணற்றடிக்கு ஓடுகிறாள். எனக்கு ரொம்பவும் பயமாக இருக்கறிது". என்று கூறி வருந்தினான்.

"கிணற்றில் விழுவேன் என்று அவள் சொல்வதற்காக, நீ பயப்படாதே, இனிமேல், அவள் அப்படிச் சொன்னால், தைரியமாக,

நீ கிணற்றில் நன்றாக விழு. எனக்குத் தொல்லை ஒழியும் என்று கூறு.'' என்று தைரியம் கூறினான் முதலாளி.

“அவள் விழுந்துவிட்டால்,என்ன செய்வது? எனக்கு அவமானம் ஏற்படுமே'' என்றான்.

“அப்படி சொல்லிக் கெண்டிருக்கிறவள், ஒரு நாளும் விழவே மாட்டாள்; தைரியமாக இரு'' என்றான் முதலாளி.

சில நாட்களுக்குப் பிறகு, “இப்படியே வறுமையில் போராடிக் கொண்டிருக்க முடியாது. கிணற்றில் விழுந்து சாகிறேன் என்று சொல்லிவிட்டு, கிணற்றுக்குச் சென்று கொண்டிருந்தாள் “என்னை தொல்லைப் படுத்தாதே, நீ கிணற்றில் விழுவதற்காக நான் பயப்படவில்லை. எல்லோரும் ஒரு நாள் சாக வேண்டியவர்கள் தானே. யாருடைய உயிரை யார் தடுக்க முடியும்?'' என்றான். “என்னை சாகவா சொல்கிறாய்? என்று கூறி, அழ ஆரம்பித்தாள். பிறகு, அவள், “கிணற்றில் விழுவேன்'' என்று சொல்வதே இல்லை.

*இவ்வாறு கணவனைத் தொல்லைப்படுத்துகிறவர்களும் இருக்கின்றனர்.*

# 41

# மூடர்கள் உயிரை இழந்தனர்

சிறிய நகரம் ஒன்றின் அருகில் அண்ணன், தம்பி இருவர் இருந்தனர். அவர்களுக்குச் சொந்தமான ஒரு சிறு குடிசையில் தங்கினர்.

பெற்றோர், உறவினர் யாருமே அவர்களுக்கு இல்லை.

படிப்பும் இல்லை, வேலை எதுவும் இல்லை. இருவரும் நன்றாக கொழுகொழு என்று காணப்பட்டனர்.

5

அவர்கள் இருவரையும் கண்டால், அந்த வட்டாரத்தில் இருப்பவர்கள் எவரும் பேசுவதில்லை, அவர்களைக் கண்டால் ஒதுங்கிப் போய்விடுவார்கள்.

சிற்றுண்டி விடுதிக்குச் சென்று சாப்பிட்டு விட்டுப் போவார்கள். காசு கொடுப்பதில்லை, சிற்றுண்டி விடுதிக்காரர் கேட்பதும் இல்லை.

அவர்களின் குடிசைக்கு எதிரில், ஒரு பெண் இருந்தாள். அவள் ஒரு அனாதை. அவள் சில வீடுகளில் வேலை பார்த்தாள். அவர்கள் கொடுக்கும் உணவைச் சாப்பிட்டு விட்டு, குடிசையில் படுத்துக் கொள்வாள்.

அந்தப் பெண் மீது அண்ணன், தம்பி இருவருக்கும் ஆசை உண்டாயிற்று. ஒருவனுக்குத் தெரியாமல், இன்னொருவன் அவளிடம் நெருங்கி ஏதாவது பேசுவான். அவளோ சாமர்த்தியமாக நடந்து கொள்வாள்.

அந்தப் பெண்ணுக்கு, பூ, இனிப்பு, பலகாரம் முதலியவற்றை கொண்டு வந்து கொடுப்பார்கள்.

இவர்கள் இருவரையும் எப்படிச் சமாளிப்பது என்று யோசித்தாள்.

அதே சமயம், அவர்களுக்கு வேலையும் இல்லை, வருமானமும் இல்லை, அவர்கள் இருவரையுமே அவள் விரும்பவில்லை.

ஒருநாள் அண்ணன், தம்பி இருவரிடமும், "நீங்கள் இருவரும் என்னிடம் ஆசை கொண்டு என்னை அடைய விரும்புகிறீர்கள், ஆனால், உங்களில் யாரை ஏற்றுக் கொள்வது? என்று எனக்கு குழப்பமாக இருக்கிறது. என் தாய் மரணத் தறுவாயில், "பலசாலியான ஒருவனைப் பார்த்து திருமணம் செய்து கொள்" என்று சொன்னாள். ஆகையால், நீங்கள் இருவரும், குத்துச் சண்டை போட்டு, யார வெற்றி பெறுகிறீர்களோ, அவரை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றாள் அவள்

“மறுநாள் இரவு பத்து மணிக்குப் பிறகு, அந்த வட்டாரத்தில் இருந்த பூங்காவில், அண்ணனும் தம்பி குத்துச் சண்டையில் இறங்கினார்கள். மிகவும் கடுமையாக இருவரும் மோதிக் கொண்டனர். ஒரு மணி நேரம் குத்துச் சண்டை தொடர்ந்தது. கடைசியில், இருவருமே தரையில் மூர்ச்சையாகி வீழ்ந்தனர். அவர்கள் உயிர் பிரிந்தது.

அந்தப் பெண்ணின் பிரச்சினையும் தீர்ந்தது.

*மூடத்தனத்தால் உயிரை இழந்தனர் முரடர்கள்.*

# 42

# திருமணம் செய்து கொள்வது ஏன்?

ஒரு ஊரில் ஒரு பணக்காரர் மகளுக்குத் திருமணம் நிகழ்ந்தது. அந்தப் பணக்காரரின் உறவினர் ஒருவர் தம்முடைய ஐந்து வயதுச் சிறுமியை அழைத்துக் கொண்டு திருமணத்துக்குச் சென்றிருந்தார்.

திருமணம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. மேள வாத்தியங்கள் முழுங்கின. மணமகனும், மணமகளும் மணமேடையில் அமர்ந்து இருந்தனர். ஏராளமானவர்கள் வந்து மணமக்களை வாழ்த்தி, பரிசுகள் அளித்துச் சென்றனர்.

அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமிக்கு மிகவும் வியப்பாக இருந்தது. அதற்கு முன், திருமண நிகழ்ச்சியையே அந்தச் சிறுமி பார்த்ததில்லை.

“பாப்பா! நீ பெரிய பெண் ஆனதும் உனக்கும் இதேபோல் மிகப் பிரமாதமாகத் திருமணம் நடைபெறும்” என்று சிறுமியிடம் பெருமையாகக் கூறினார் பணக்காரர்.

“அப்பா! திருமணம் செய்து கொண்டால், கணவனும் மனைவியும் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டே இருக்க வேண்டுமா?” என்று கேட்டாள் சிறுமி.

“ஏன் அப்படிக் கேட்கிறாய்? திருமணம் செய்து கொண்டு, கணவனும் மனைவியும் மகிழ்ச்சியாக, ஒற்றுமையுடன் இருந்து, வாழ்க்கை நடத்தி குழந்தைகளைப் பெறுவதற்காகவே திருமணம் செய்து கொள்வது” என்றார் அந்தப் பணக்காரர்.

“அப்பா! நீங்களும் அம்மாவும் ஒற்றுமையாக இல்லையே? இருவரும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்கிறீர்கள். நீங்கள் அம்மாவை திட்டுகிறீர்கள். அம்மா அழுது கொண்டிருக்கிறாள். அதைக் காணும் போது, எனக்கு அழுகை வருகிறது. அந்த மாதிரியான திருமணம் எனக்கு வேண்டவே வேண்டாம்” என்றாள் சிறுமி.

சிறுமியின் சொல்லைக் கேட்ட பணக்காரர் பதில் ஒன்றும் சொல்லாமல் வெட்கப்பட்டார்.

குழந்தைகள் எதிரில், பெற்றோர் சச்சரவிட்டுக் கொள்வது அவர்களுடைய மனதைப் பாதிக்கும் என்பதை உணர்ந்தார் அவர்.

# 43

# இந்த உருவமே போதும்

காசி நகரத்தில் காலசர்மன் என்ற அந்தணன் இருந்தான். அவனுடைய தோற்றம் சற்று அருவருப்பாக இருந்தது. அதற்காக அவன் வருந்தினான்.

தனக்கு அழகான தோற்றமும், செல்வமும் கிடைக்க வேண்டும் என்று நினைத்து, காட்டுக்குச் சென்று கடுமையான தவத்தை மேற்கொண்டான்.

அதை அறிந்த இந்திரன், தன்னை நோய் பிடித்த, அருவருக்கத்தக்க ஒரு நரியின் உருவத்தோடு காலசர்மன் முன்னே வந்து நின்றான்.

அந்த நரியின் உடலிலிருந்து துர்நாற்றம் வீசியதையும் அதன் உடலின் மீது ஈக்கள் மொய்ப்பதையும் கண்ட காலசர்மன் அருவருப்படைந்து, "ஐயையோ! இத்தகைய கோரமான உருவம் படைத்த உயிர்களும் இந்த உலகில் இருக்கின்றனவே! மறுபிறப்பில் செய்த பாவத்தின் பிரதிபலனாகத்தான் இந்தப் பிறவியில் இப்படிப்பட்ட தோற்றத்தைப் பெற்றிருக்கிறது. போலும்! ஆகையால், இந்த விகாரமான உருவத்தைக் காணும் போது, நான் ஏதோ சிறிது அளவே பாவம் செய்திருப்பேன் போலும்! கடவுள் இந்த நரியைப் போல் மோசமான அருவருக்கக் கூடியதாயும் நோய் உடையதாகவும் ஆக்காமல், மனித உருவத்தில் என்னை பிறக்கச் செய்தான் போலும்!" என்று நினைத்துக் கொண்டே தவத்தை கைவிட்டு, காட்டிலிருந்து வீட்டுக்குத் திரும்பிச் சென்றான் காலசர்மன்.

*இருப்பதைக் கொண்டு மனநிறைவோடு வாழ்வதே சிறப்பாகும்.*

# 44

# பேசுவதும் நடந்து கொள்வதும்

ஒரு ஊரில் பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தில் பிறந்த் ஒருவன், பலருடைய உதவியால், படித்துப் பட்டம் பெற்றான். பிறகு சிபார்சினால் அரசாங்க வேலையில் அமர்ந்து பின்னர் அதிகாரி ஆனான்.

அவன் அதிகாரியான பின், எப்பொழுதும் 'சமத்துவம், சகோதரத்துவம்' (அனைவரும் சமம், அனைவரும் சகோதரர்கள்) என்று எப்பொழுதும் கூறிக் கொண்டிருப்பது வழக்கம்.

அந்த அதிகாரி, தன்னுடைய இல்லத்தில் பிரார்த்தனை நடத்துவதற்காக அருளாளர் ஒருவரை வரும்படியாக சொல்லி இருந்தார். அவரும் வந்தார்.

பிரார்த்தனை தொடங்கும்போது, அதிகாரியின் குடும்பத்தினர் அனைவரும் வந்து அமர்ந்தனர்.

"உங்கள் வீட்டில் வேலைக்கு ஆணோ, பெண்ணோ இருக்கின்றனரா? இருந்தால், அவர்களையும் அழையுங்கள்" என்றார் அருளாளர். அப்போது அடுக்களையிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரப் பெண்ணை பிரார்த்தனை அறைக்கு வருமாறு கூறினார்.

பரட்டைத் தலையுடன் அழுக்குப் படிந்த கிழிந்த பாவாடை தாவணி அணிந்திருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தார் அருளாளர். அந்தப் பெண்ணின் அலங்கோலத்தைப் பார்த்து முகம் சுளித்தார் அருளாளர்.

அந்த அதிகாரியைப் பார்த்து, 'சமத்துவம் சகோதரத்துவம்' என்று "எப்போதும் பேசிக் கொண்டிருக்கிறீர்களே! உங்களுக்காக, உங்கள் வீட்டில் நாள் முழுதும் உழைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுமியை இப்படியா வைத்திருப்பது? வேலை ஆட்களை நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள எண்ணினேன். இப்பொழுது நன்றாகவே அறிந்து கொண்டேன். 'சமத்துவம் சகோதரத்துவம்' என்பது இதுதானா?" என்று சற்று கடுமையாகக் கூறினார் அந்த அருளாளர்.

அதிகாரி வெட்கத்தால் தலைகுனிந்தார். எதுவும் பேச இயலவில்லை.

*பொதுவாக, பெரும்பாலோர் பிறருக்கு அறிவுரை கூறுவார்கள். ஆனால், தாங்கள் மட்டும் கடைப்பிடிக்க மாட்டார்கள்.*

# 45
# புரட்சிப் பெண்

ஒரு கிராமத்தில் ஓலைக்குடிசை ஒன்றில், ஏழு வயதான சிறுமி பாடம் படித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது கிராம அதிகாரி வந்து "உன் அம்மா, அப்பா எங்கே?" என்று கேட்டார்.

"அம்மா பசுவைத் தேடிச் சென்றிருக்கிறாள். அப்பா முதலாளி வீட்டுத் தோட்டத்துக்குப் போயிருக்கிறார்" என்றாள் சிறுமி.

"வரும் ஞாயிற்றுக் கிழமைக்குள் வரிப்பணத்தைக் கொண்டு வந்து தரவில்லையானால், பசுவைப் பிடித்துக் கொண்டு போய்விடுவேன்." என்று கடுமையாகக் கூறினார் கிராம அதிகாரி.

"எங்கள் வீட்டுப் பசுவைப் பிடித்துக் கொண்டு போவதற்கு நீங்கள் திருடரா?" என்று கேட்டாள் சிறுமி.

"சிரித்துக் கொண்டே, மக்குப் பெண்ணே! நான் திருடன் அல்ல! திருடன் சொல்லிவிட்டுத் திருட மாட்டான்" என்றார் கிராம அதிகாரி.

"பிறகு, ஏன் எங்கள் பசுவைக் கொண்டு போக வேண்டும்?" என்று கேட்டாள் சிறுமி.

"அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரி செலுத்தாதனால் உங்கள் பசுவைக் கொண்டு போவேன்" என்றார் அதிகாரி.

"வரி என்றால் என்ன? அரசாங்கம் ஏன் வரி போடுகிறது? அரசாங்கத்திடம் பணம் கிடையாதா? அது எங்களைப் போல் ஏழையா?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டாள் சிறுமி.

"வரி போடுவது பொதுமக்கள் நன்மைக்காகவே, மருத்துவ உதவி, கல்வி வசதி, போக்குவரத்துக்காக சாலை போடுதல், பாலம் அமைப்பது, கலவரம், திருட்டு நடக்காமல் பாதுகாப்பது, ஊழியர்களுக்குச் சம்பளம், இப்படியாக பல தேவைகளுக்கு அரசாங்கத்துக்கும் பணம் தேவைப்படுகிறது. அதற்காகவே வரி போடப்படுகிறது" என்றார் அதிகாரி.

"எங்கள் தேவைகளை நாங்களே பார்த்துக் கொள்கிறோம். அரசாங்கம் எதுவும் எங்களுக்குச் செய்ய வேண்டாம், அதனால் நாங்கள் வரி செலுத்த மாட்டோம்" என்றாள் சிறுமி

"வயதான பின்னர் நீ எல்லாவற்றையும் தெரிந்து கொள்வாய், இப்பொழுது விளக்கிச் சொல்ல இயலாது. உன் அம்மா வந்ததும் கிராம அதிகாரி வந்தார் என்று சொல்" என்று கூறி புறப்பட்டார்.

"இந்தப் பெண், பெரியவளானபின் ஒரு புரட்சிக்காரியாக ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை" என்று நினைத்துக் கொண்டார்.

*உலகில் அரசியல், கல்வி, சமூகம் ஆகியவற்றில் பல புரட்சிப் பெண்கள் தோன்றியுள்ளனர்.*

# 46

# மூன்று பேரையும் தேள் கொட்டியது

ஒரு ஊரிலிருந்து மூன்று இளைஞர்கள் வேலை தேடி அடுத்த ஊருக்குப் புறப்பட்டார்கள்.

வழியில் ஒரு அரச மரத்தின் அடியில், மிகப் பெரிய பிள்ளையார் சிலை காணப்பட்டது.

அந்தப் பிள்ளையாரின் தொப்புள் பெரிதாக இருந்தது. அதில்

ஏதாவது இருக்குமா என்று நினைத்து, ஒரு விரலை அதில் நுழைத்தான் ஒருவன் அங்கே தேள் ஒன்று அவனைக் கொட்டியது.

"ஆகா தொப்புளுக்குள் புனுகு இருக்கிறது!" என்றான் விரலை வைத்தவன்.

அவன் சொல்லை நம்பி, இரண்டாவது இளைஞனும் தொப்புளில் விரலை வைத்தான். அவனையும் தேள் கொட்டியது. ஆகா, புனுகு இருக்கிறது" என்றான்.

மூன்றாவது இளைஞனும் அவர்களைப் போல் தொப்புளில் விரலை வைத்தான். அவனையும் தேள் கொட்டியது. ஆனால், அவன் எதுவும் சொல்லவில்லை.

இப்படித்தான் தனக்கு நேர்ந்த துன்பம், பிறருக்கும் ஏற்படவேண்டும் என்று சிலர் நினைப்பார்கள்.

# 47

## உழைப்பினாலா? கருணையினாலா?

ஒரு மளிகை வியாபாரியிடம் முஸ்லிம் இளைஞரும், கிறிஸ்துவ இளைஞரும் பணிபுரிந்து வந்தனர். வியாபாரி ஒரு நாள், பணப்பையை வீட்டுக்கு எடுத்துப் போக மறந்து கடையிலேயே வைத்து விட்டு, மறதியாகச் சென்று விட்டார்.

இரண்டு நாள் கழித்து கடைக்கு வந்தபோது, பணப்பை வைத்த இடத்திலேயே இருந்ததைக் கண்டார். பணமும் பையில் வைத்த படியே இருந்தது.

இரண்டு வேலையாட்களுமே யோக்கியமானவர்கள் என்று மகிழ்ச்சி அடைந்தார் வியாபாரி.

ஒருநாள் , இரண்டு வேலையாட்களையும் கூப்பிட்டு, "நீங்கள்

இருவரும் எதனால் வாழ்கிறீர்கள்?" என்று கேட்டார். "உழைப்பால் வாழ்கிறேன்" என்றான் முஸ்லிம் இளைஞன். "தங்கள் கருணையால் வாழ்கிறேன்" என்றான் கிறிஸ்துவ இளைஞன்.

சில நாட்களுக்குப்பிறகு, ஒரு பரங்கிக் காயை கிறிஸ்துவ இளைஞனுக்கும், மூன்று ரூபாயை முஸ்லீம் இளைஞனுக்கும் கொடுத்தார் வியாபாரி.

இருவரும் வீட்டுக்குச் செல்லும் போது, "பரங்கிக்காய் என் கொல்லையில் இருக்கிறது. இதை நீ எடுத்துக் கொள்கிறாயா?" என்று கேட்டான் கிறிஸ்துவ இளைஞன்.

சரி என்று கூறி, அவனிடமிருந்து பரங்கிக் காயை வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக, மூன்று ரூபாயைக் கொடுத்தான் முஸ்லீம் இளைஞன். வீட்டுக்குச் சென்று, பரங்கிக் காயைக் கீறினான். அதில் ஒரு தங்க மோதிரம் இருப்பதைக் கண்டான். அந்த மோதிரத்தைக் கொண்டு போய் வியாபாரியான முதலாளியிடம் கொடுத்து, தாங்கள் இருவரும் இரவு போகும்போது, மாற்றிக் கொண்ட விவரத்தைக் கூறினான் முஸ்லீம் இளைஞன். வியாபாரி, "நீ உழைப்பினால் தான் வாழ்கிறாய்!" என்ற அவனைப் பாராட்டியதோடு, அந்த மோதிரத்தை நீயே என்னுடைய பரிசாக வைத்துக் கொள்" என்று கூறினார்.

*அவர்கள் இருவரும் என்ன செய்கிறார்கள் என்பதை சோதிக்கவே, பரங்கிக்காயினுள் மோதிரத்தை வைத்திருந்தார் முதலாளி*

# 48

## நாட்டு மககளை வாழ வைத்தவன்

மலையப்பிரபன் என்ற அரசன், ஒரு நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்தான்.

தொடர்ந்து அந்த நாட்டில் மழை பெய்யாததால், பஞ்சம் உண்டாயிற்று. மக்கள் பட்டினியால் வாடி உயிர் இழந்தனர். கால் நடைகளுக்கு தண்ணீரும் இல்லை; தீவனங்களும் இல்லாமை யால் அவை செத்துப் போயின.

குடிமக்களின் துயரத்தைக் கண்டு மனம் சகியாமல், அரசன் இரக்கம் கொண்டு பக்கத்து நாடுகளிலிருந்து தேவையான உணவுப் பொருள்களை வரவழைத்து நாட்டு மக்களின் துன்பத்தைப் போக்க முயன்றான்.

ஆனால், சுயநலமிக்க சுரண்டல் காரர்களான அமைச்சர்கள், அரசனின் நல்ல நோக்கம் நிறைவேற விடாமல் சூழ்ச்சி செய்தனர்.

இளவரசனான இந்திரபிரபன் நாட்டுமக்களின் துன்பத்தையும், அமைச்சர்களின் போக்கையும் அறிந்து வேதனை அடைந்தான்.

தந்தையிடம் சென்று, "அமைச்சர்களின் தீயயோசனை களைக் கேட்டு, குடிமக்களை அழிய விடுவதுதான் ஆட்சி முறையா? மக்களின் தேவையை நிறைவேற்றக் கூடிய கற்பக விருட்சம் போன்றவர் அல்லவா அரசர்" என்று வாதாடினான் இளவரசன்.

அமைச்சர்களின் கைப்பொம்மையாகிவிட்ட அரசன், மகனின் போக்கைச் சிறிதும் விரும்பாமல், "மக்களின் தேவைகளை

நிறைவேற்ற நான் குபேரன் அல்ல! உனக்கு ஆற்றல் இருந்தால், நீயே அதைச் செய்யலாமே?" என்று கண்டிப்பாகக் கூறினான்.

தந்தையின் பிடிவாதத்தைக் கேட்டு வருந்திய இளவரசன், "விரும்பியதை எல்லாம் அளிக்கக் கூடிய கற்பகத்தருவாக இருக்கவேண்டும் அல்லது அந்த முயற்சியில் ஈடுபட்டு உயிரைவிடவேண்டும்" என்ற உறுதியோடு, மலைப்பகுதிக்குச் சென்று, கடுமையான தவத்தை மேற்கொண்டான்.

அவனுடைய தியாக உள்ளத்தையும், உறுதியையும் அறிந்த இந்திரன் கருணை காட்டி, அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றினான்.

மக்களை வாட்டிய பஞ்சம் நீங்கியது. நாட்டில் மழை பொழிந்தது, மக்கள் செழிப்புடன் வாழலானார்கள்.

இப்படி இருக்கும்போது, இளவரசன் இந்திரபிரபன் முன், இந்திரன் தோன்றி, "இந்த நாட்டில் உன்னிடமிருந்து உதவி கேட்டுப் பெற எவருமே இல்லை. ஆகையால், நீ சுவர்க்க லோகத்துக்கு வந்து வாழ்வாயாக" என்று அழைத்தான்.

இந்திரனின் அழைப்பை ஏற்காமல், "என் நலனை மட்டும் பெரிதாகக் கருதி, நான் மட்டும் எப்படி வருவேன்? என் குடிமக்களுடன் வாழ்வதே எனக்கு சுவர்க்கலோகம்" என்று மறுத்து விட்டான். இளவரசன்.

அவனுடைய பரந்த நோக்கத்தையும், தியாக உள்ளத்தையும் பாராட்டி, "உன் நாட்டு மக்கள் அனைவரும் சுவர்க்க பூமிக்கு வந்து சேரலாம்" அவர்களை உன் விருப்பம் போல் அழைத்துச் செல்லலாம். என்று பெருந்தன்மையோடு கூறினான் இந்திரன்.

" ஆனால், எதிர்காலத் தலைமுறையினருக்கு உதவ நான் இங்கு இருக்க வேண்டும்" என்றான். இளவரசன்.

அவனுடைய புகழ் எங்கும் பரவியது. மக்கள் போற்றினர்.

*இக்கதையில் தியாகம், பரந்த நோக்கம், சுயநலமின்மையே மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.*

# 49

# திறமை மிக்க அமைச்சர்கள்

உச்சயினி என்ற சிறிய நாடு. அதை புண்ணிய சேனன் என்ற அரசன் ஆட்சி செய்தான். நாடு வளமாக இருந்தது. மக்களும் நலமாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அதைக் கண்டு பொறாமை கொண்டான் பக்கத்து நாட்டு அரசன் பராக்கிரமன் என்பவன்.

அவ்வப்போது, சிறு சிறு எல்லைச் சண்டைகளை ஏற்படுத்திக் கொண்டே இருந்தான் பகைவனான பராக்கிரமன்.

திடீரென ஒரு நாள், உச்சயினி நாட்டின் மீது முற்றுகையிட்டு விட்டான் அந்த பராக்கிரமன்.

உச்சயினியின் படைபலம் பகைவனுக்கு ஈடுகொடுக்கத் தக்கதாக இல்லை. எதிர்த்துப் போரிட்டால், நிச்சயம் தோல்வி ஏற்படும் என்பது அமைச்சர்களுக்கு நன்கு தெரியும். அதனால், அமைச்சர்கள் கூடி, ஆலோசனை நடத்தி, ஒரு திட்டம் தீட்டி, அதன்படி செயல்பட்டனர். உச்சயினி அரசனையும் ராணியையும் மாறுவேடத்தில், பாதுகாப்பான இடத்தில் மறைத்து வைத்தனர்.

பிறகு, அரசனும் ராணியும் இறந்து விட்டதாக செய்தியை எங்கும் பரவச் செய்தனர். இறுதிச் சடங்கைச் செய்வது போல ஒரு பாசாங்குச் சடங்கையும் செய்து முடித்தனர்.

தங்கள் அரசனும் ராணியும் இறந்து விட்டதால், இனி போர புரிய அவசியம் இல்லை. உச்சயினி நாட்டின் ஆட்சியை தாங்களே ஏற்று நடத்தலாம் என்ற கேட்டுக் கொள்வதாக, பகை அரசனான பராக்கிரமனக்கு சமாதானத் தூது அனுப்பினார்கள் அமைச்சர்கள்

போர் புரியாமலேயே வெற்றி கிடைத்து விட்டதாக பெருமகிழ்ச்சியில், உச்சயினி அமைச்சர்கள் அனுப்பிய சமாதானச் செய்தியை ஒப்புக் கொண்டு, உச்சயினிக்குள் கம்பீரமாக நுழைந்தான் பராக்கிரமன்.

பராக்கிரமனின் படைமுகாமில் இருந்த வீரர்கள் தங்கள் ஆயுதங்களை எல்லாம் கீழே போட்டு விட்டு, அலட்சியமாக இருந்தனர். மேலும், போர்முனையில் போதுமான எச்சரிக்கையோடு இல்லாமல், இருந்தனர்.

உச்சயினி நகரத்துக்குள் சிக்கிக் கொண்ட பகை அரசன் பராக்கிரமன் சிறைபிடிக்கப்பட்டான். இதைப் பெரிய வாய்ப்பாகக் கொண்டு உச்சயினியின் படைகள் வீறு கொண்டு எழுந்து பகைவர்களின் பாசறைக்குள் புகுந்து, பெருத்த சேதத்தை உண்டாக்கின.

அதன்பின், மறைந்திருந்த அரசனையும் ராணியையும் வெளியே அழைத்து வந்து, ஆட்சி பீடத்தில் அமர்த்தினார்கள் அமைச்சர்கள்.

அமைச்சர்களின் சாமர்த்தியத்தால், தன் நாடு, பகைவனிடம் சிக்காததோடு அவனையும் சிறைப் பிடித்ததற்கு அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்து, பல வெகுமதிகளை அளித்தான் உச்சயினி அரசன்.

*திறமையான அமைச்சர்களால், நாடும் அரசனும் மாற்றானிடம் அகப்படாமல் தப்பிக்க முடிந்தது;*

# 50

## குற்றங்களைத் தடுக்க வழி

ஒரு நாட்டை அடுத்துள்ள மலைப்பகுதியில் முனிவர் ஒருவர் தியானத்தில் ஆழ்ந்து இருந்தார்.

அந்தப் பகுதியானது கொள்ளைக்காரர்களுக்குப் புகலிடமானது. தாங்கள் நகரத்தில் கொள்ளையடித்த பொருள்களை, மறைத்து வைப்பதற்கும், தாங்கள் ஒளிந்து கொள்வதற்கும், அந்த இடத்தைப் பயன்படுத்தி வந்தனர்.

ஒரு நாள், கொள்ளையர்கள் அங்கே மறைத்து வைத்திருந்த பொருள்களை எடுத்துப் போக வந்தனர். ஆனால், பொருள்கள் காணப்படவில்லை. கொள்ளையர்கள் முனிவர்மீது சந்தேகப்பட்டு, "நாங்கள் இங்கே மறைத்து வைத்திருந்த பொருள்களைக் காண வில்லையே; அவை எங்கே?" என்று கேட்டனர்.

"நான் எதையும் அறியேன்!" என்றார் முனிவர்.

அவர் கூறியதை நம்பாத கொள்ளையர்கள் முனிவரை அடித்து, துன்புறுத்திக் கேட்டார்கள்.

முனிவர் மீண்டும், "நான் எதையும் அறியேன்" என்று கூறினார். கொள்ளையர்களுக்குச் சந்தேகம் தீரவில்லை. முனிவரைக் கத்தியால் குத்தி, சித்திரவதை செய்தார்கள்.

அப்போதும் முனிவர். "நான் எதையும் அறியேன்" என்றார்.

அதோடு முனிவரை விட்டு விட்டு, கொள்ளையர்கள் ஓடிவிட்டனர்.

மறுநாள் வேட்டைக்கு வந்த அரசன் முனிவரின் பரிதாப நிலையைக் கண்டு வருந்தி, என்ன நடந்தது என்று விசாரித்தான்.

தனக்கு நேர்ந்த கொடுமையைக் கூறினார் முனிவர்.

உடனே காவலர்களை ஏவி, கொள்ளையர்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான் அரசன்.

கொள்ளையர்கள் பிடித்து வரப்பட்டனர். அவர்களுக்கு மரண தண்டனை விதித்தான் அரசன்.

முனிவர் புன்முறுவலுடன், "அரசே! அவர்களைக் கொல்வதால், என்ன நன்மை ஏற்படும்? அவர்களுடைய முரட்டுத் தனத்தால் அவ்வாறு நடக்கின்றனர். அவர்கள் கைகளில் உள்ள கத்திகளே அவர்களை இயங்க வைக்கின்றன. அவர்களுக்குக் கல்விப் பயிற்சி இல்லாமையாலும், பசியாலுமே இவ்வாறு செய்யத் தூண்டுகிறது. நாட்டில் கல்விப் பயிற்சியும், தொழில்களும் பெருகச் செய்தால் அவர்கள் திருந்தி விடுவார்கள்" என்றார்.

அரசனும் அதை ஏற்று நாட்டில் கல்வி கற்க வசதியும், தொழில் பயிற்சியும் உண்டாக ஏற்பாடு செய்தான்.

கொள்ளையர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்தான்.

ஒவ்வொரு கதையிலும் ஒரு நீதியைக் கொண்டு சிறுவர் சிறுமியருக்குப் புரியும் வண்ணம் எளிய தமிழில் அமைந்த ஐம்பது கதைகள் கொண்டது இந்நூல்.